பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 47

ஞாயிற்றுக்கிழமை
12 ஜனவரி 2025

மார்கழி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## மயங்கி வீழ்ந்து ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 12

யோகாசனம் செய்துகொண்டிருந்தபோது மயங்கி வீழ்ந்த குடும்பத்தலைவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், கொக்குவிலைச் சேர்ந்த 15

அரச வருமானமாக

# ரூ.4,500 பில்லியன் திரட்டுக நாணயநிதியம் உத்தரவு!

போட்டுடைத்தார் சம்பிக்க



கொழும்பு, ஜனவரி 12

2025ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 500 பில்லியன் ரூபா வரையில் அரச வருவாயை திரட்டிக்கொள்ளவேண்டும் என சர்வதேச நாணயநிதியம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. வரி அதிகரிப்பைத் தவிர்த்து, அரசவருவாய் அதிகரிப்புக்கு அரசாங்கத்திடம் எவ்விதத் திட்டங்களும் இல்லை என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 15

விரிவுகள் :- பக். 15

மீன்பிடியில் ஈடுபடுவது

## உங்களுக்கு வாழ்வாதாரமெனில் எங்களுக்குப் பொழுதுபோக்கா?

தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு யாழ்ப்பாண மீனவர்கள் பதிலடி

## கிளிநொச்சி - கனகபுரம் துயிலுமில்லத்தில் பதற்றம்

பொதுமக்கள் கடும் விசனம்

## நீதிபதி பந்துலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

## மதுபானங்களின் விலை அதிகரிப்பு

## யாருடைய கூட்டணியும் எமக்குச் சவாலில்லை!

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 12

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன இணைந்து களமிறங்கினால்கூட ஆளுங்கட்சிக்குச் சவால் இல்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். 11

## 60 கிராம் ஹெரோய்னுடன் இளைஞர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 60 கிராம் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இளை 16

## தொடர் திருட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது!

விரிவு :- பக். 11

முச்சந்தி முரளி



'அப்ப முந்தி நிப்பாட்டின திட்டங்களுக்கு திரும்ப உயிர் குடுக்கினம் கண்டியளோ'

## ஓய்வூதிய அதிகரிப்பு மீண்டும் நடைமுறை!

கொழும்பு, ஜன. 12

2020ஆம் ஆண்டில், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நிறுத்தப்பட்டிருந்த ஓய்வூதிய அதிகரிப்பு நடைமுறையை மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்கு அநுர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 16

# சஞ்சீவி

ஏன் உங்கள் பணத்தை சிக்க வைக்கிறீர்கள்?

Yielding as at 31/12/2024

9.26%

First Capital Money Market Fund இல் முதலீடு செய்யுங்கள்.
விரும்பிய நேரம் மீளப்பெற்றுக்கொள்ளுங்கள்.

தற்போதைய வருமான விகிதத்தில் மாறுபாடுகள் மற்றும் மாற்றங்கள் ஏற்படலாம். கடந்தகால செயல்திறன் எதிர்கால வருமானத்தின் குறிகாட்டி அல்ல. முதலீட்டாளர் பிரதான தகவல் ஆவணத்தை (KIID) வாசித்து புரிந்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவற்றுள் முதலீட்டாளர்கள் சம்மந்தப்பட்ட கட்டணங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 077 007 3684

173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

Open an account

First Capital
A Janashakthi Group Company

மக்கள் ... நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெதுமெதுவாகச் சரிகிறது நாட்டின் பொருளாதாரம்

## விளைவுகள் ஏப்ரலில் எதிரொலிக்கும் ரோஹிணி கவிரத்ன எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன. 12**

**இலங்கையின் பொருளாதாரம் மெதுவாக ஆனால் உறுதியாக மீண்டுமொரு தடவை வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையின் நடைமுறைச் சேமிப்பு 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 432 மில்லியன் டொலர்கள் மேலதிக நிதியைக் கொண்டிருந்தது. அது மூன்றாம் காலாண்டில் 303 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

அரசநிர்வாகத்தின் பலவீனங்கள் மற்றும் பொருளாதார விவகாரங்க ளைக் கையாளுவதில் பிழையான அணுகுமுறைகள் காரணமாகவே இவ்வாறான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அநுரகுமார திஸாநாயக்க நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற போது, இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு 6,472 பில்லியன் டொலராக இருந்தது.

நவம்பர் மாதத்தில் அது 6,451 பில்லியன் டொலராக 21 பில்லியன் டொலராலும், டிசெம்பரில் 6.091 பில்லியன் டொலராக 360 பில்லியன் டொலரால் வீழ்ச்சியுற்றுள்ளது.

மூன்றுமாத காலப்பகுதிக்குள் மொத்தம் 381 பில்லியன் டொலர் வீழ்ச்சியுற்றுள்ளது.

கடந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட கடன் வழங்குனர்களுக்கு கொடுக்கவேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகைகளையும் உரிய முறையில் செலுத்தியதுடன், தொடர்ச்சியாக அந்நியச் செலாவணிக் கையிருப்பை நேர்மறை விகித வளர்ச்சியில் பேணிக்கொண்டிருந்தது.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதல் 100 நாள்களுக்குள்ளாகவே அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு, வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் அதன் தாக்கங்களை உணரக் கூடியதாக இருக்கும் - என்றார். (ச-இ)

## சிறையில் ஞானசாரருக்கு திடீர் சுகவீனம்

கொழும்பு, ஜன.12
சிறையிலடைக்கப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இஸ்லாம் மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காக ஞானசாரருக்கு ஒன்பது மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து மறுநாளே அவர் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளாரென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## சிகிரியாவைப் பார்க்க இரவிலும் அனுமதி

கொழும்பு, ஜன.12
தொல்பொருள் மதிப்புடைய பல இடங்களை இரவு நேரங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்துவைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம்செலுத்தியுள்ளது. அதன்படி, சிகிரியா இரவு நேரங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. (ச-இ)

## கிராம அலுவலர்களுக்கு 3,000 பணிவெற்றிடம்

கொழும்பு, ஜன. 12
நாடுமுழுவதும் 3,000 க்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன என்று பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஒரு கிராம உத்தியோகத்தர் பல பிரிவுகளில் பணிகளை மேற்பார்வையிடவேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

இந்தநிலையில் இந்த வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## மலையக மக்களுக்கான தீர்மானங்களுக்கு ஆதரவு

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 12
நீண்டகாலமாகத் தீர்க்கப்படமுடியாமல் தொடரும் மலையக மக்களின் அடிப்படைச் சம்பளப்பிரச்சினைகள் தொடர்பில் எந்தவொரு கட்சியும் முன்னெடுக்கும் ஆக்கபூர்வமான தீர்மானங்களுக்கு பொதுஜன பெரமுன கட்சி தனது முழு ஆதரவையும் வழங்குமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எமது ஆட்சிக்காலத்தில் நாம் மலையக மக்களைக் கைவிடவில்லை. ஆனால், இன்றைய ஆட்சியாளர்களினால் அவர்களின் அடிப்படைச் சம்பளப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்தவித நகர்வையும் மேற்கொள்ள முடியவில்லை.

இருந்தபோதிலும், இந்தச் சம்பளப்பிரச்சினை தொடர்பில் எந்தக் கட்சியேனும் ஆக்கபூர்வமான முன்னகர்வைக் கொண்டுவந்தால் அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ஆனையிறவு உட்பட நாட்டிலுள்ள உப்பளங்கள் மார்ச்சுக்குள் மீளியக்கம்!

கொழும்பு, ஜன. 12
இலங்கையின் உப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்த ஆண்டின் மார்ச் மாதத்துக்குள் வடக்கில் ஆனையிறவில் உள்ள ஒரு உப்பளம் உட்பட உப்பளங்களை முழுமையாகச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போருக்குப் பின்னர் செயற்படாமல் இருந்து வந்த ஆனையிறவு உள்ளிட்ட உப்பளங்கள் உப்பு உற்பத்தியை அதிகரிக்க உதவும் வகையில் உருவாக்கப்படவுள்ளன.

2009ஆம் ஆண்டு அந்தப் பகுதி விடுவிக்கப்பட்ட பிறகு, உப்பளத்தை, பாரம்பரிய தொழில் மற்றும் சிறுதொழில் மேம்பாட்டு அமைச்சகம் கையகப்படுத்தியது. அத்துடன் 100 மில்லியன் ரூபா செலவில் புதுப்பித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை 2015 ஆம் ஆண்டில் 2ஆம் கட்ட நடவடிக்கைக்காக அமைச்சரவை 125 மில்லியன் ரூபாவுக்கு ஒப்புதல் அளித்தது.

அத்துடன் 2015, செப்ரெம்பர் 21 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் உப்பளமானது இப்போது மீண்டும் தேசிய உப்பு நிறுவனத்தின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்டம் 1 , கட்டம் 2 புதுப்பித்தல் நடவடிக்கைகளில் 95 வீதம் நிறைவடைந்துள்ளன. எனவே புதுப்பித்தலுடன், உப்பு உற்பத்தி ஆண்டுக்கு சுமார் 20,000 தொன்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் கூறியுள்ளார். (ச-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | 0421 | O | 4 1 8 7 1 0 |

### Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | 2687 | O | 27 49 52 59 |

### சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | D | 10 45 65 71 | 4848 |

### SASIRI DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | 0598 | 13 26 38 |

### லக்ன ராசி DLB

| திகதி | தினம் | கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | | 20 25 47 59 | 4399 |

### KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | W | 33 | 07 38 47 75 | 1863 |

### அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 | சனிக்கிழமை | C | 18 25 42 73 | 2513 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண மாணவர்களின் நலன் கருதி IDP Education இன் புதிய கிளை யாழ்ப்பாணத்தில்!

# IDP Education Opens New Office in Jaffna to Support Local Students

**இலங்கை, வடமாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கு சேவைகளை விரிவாக்கும் ஒரு முயற்சியாக IDP Edcucation ஆனது சர்வதேச மாணவர்களின் இடமாற்றம் மற்றும் மொழித்தேர்வு சேவைகளுக்கு (IELTS) 16.01.2025 யாழ்ப்பாணத்தில் புதிய அலுவலகத்தை உத்தியோகபூர்வமாகத் திறக்கவுள்ளது.**




இந்த புதிய அலுவலகம், வெளிநாட்டில் கல்வி பெற ஆர்வமுள்ள யாழ்ப்பாணம் மற்றும் அதனை சூழவுள்ள மாணவர்களுக்கு தமது சேவைகளை வழங்க தயாராகவுள்ளது. மாணவர்களுக்கான பாடநெறித்தேர்வு, விசா வழிகாட்டுதல், விண்ணப்ப செயல்முறை மட்டுமன்றி அவுஸ்ரேலியா, கனடா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உயர் கல்வி பெற முன்பதிவு உதவிகளை வழங்க தயாராகவுள்ளது.

IDP Education இலங்கையில் கொழும்பு மற்றும் கண்டி போன்ற முக்கிய நகரங்களில் ஏற்கனவே தமது சேவைகளை சிறப்பாக வழங்கி வருகின்றது. யாழ் கிளையின் விரிவாக்கமானது வட பிராந்தியத்திலுள்ள மாணவர்களின் சர்வதேச கல்விக்கான கனவினை நனவாக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படுகின்றது.

### யாழ் மாணவர்களின் வளமான எதிர்காலத்தை நோக்கி!...

"நாம் யாழ்ப்பாணத்தில் எமது புதிய கிளையை திறப்பதினூடாக மாணவர்களுக்கான உலகத்தரம் வாய்ந்த சேவையினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்" - Mr.Ravi Chandran - (Country Director of IDP Education – Sri Lanka)

வடமாகாண மாணவர்களின் வெளிநாட்டு உயர் கல்வியினை தொடரும் ஆர்வமானது அதிகரித்து காணப்படுகின்றது. இதன் காரணமாக IDP Education மாணவர்கள் தமது வெளிநாட்டு கல்வியினைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதில் பெருமையடைகின்றது. இத் திறப்பு விழாவில் உள்ளூர் முக்கியஸ்தர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவானது ribbon cutting நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து எதிர்கால மாணவர்களுக்கான சேவை வழிகாட்டல் மற்றும் மேலதிக தகவல் வழங்குதலும் நடைபெறும்.

### மாணவர்களுக்கான வழிகாட்டுதல் மற்றும் முழுமையான சேவைகள் :



**எமது சேவைகள் தொடர்பான விபரங்கள் உங்களுக்காக:**

- பொருத்தமான பாடநெறி மற்றும் நாட்டினைத் தெரிந்தெடுப்பதற்கான இலவச ஆலோசனைகள்.
- வெளிநாட்டு பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்களை மேற்கொள்ளல்.
- மாணவர்கள் விசா விண்ணப்பங்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள்.
- புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் குறித்த தகவல்கள்.
- வெளிநாட்டில் வாழ்வதற்கான போக்குவரத்து மற்றும் தங்குமிட ஏற்பாடுகள்.




**யாழ்ப்பாணத்திலுள்ள எமது IDP கிளையானது IELTS பரீட்சையினை நோக்கி நகரும் மாணவர்களுக்கு ஒரு மையமாக விளங்குகின்றது.**




### எதிர்கால தலைமுறைக்கான புதிய ஆரம்பம்!.

யாழ்ப்பாணக் கிளையின் விரிவாக்கமானது சர்வதேசக் கல்வியை இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள மாணவர்கள் அணுகக்கூடிய வகையில் IDP நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும். வெளிநாட்டில் கல்வி பெறுவதற்கான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், யாழ்ப்பாணக் கிளையின் இப்புதிய வரவானது இந்தப்பிராந்தியத்தின் வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்கு முக்கியமாக ஆதரவு அளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.




**"வடமாகணத்தைச் சேர்ந்த மாணவர்களின் வளமான கல்விப் பயணத்தை நோக்கி வழிநடத்தி உலகளாவிய ரீதியில் வெற்றி பெற அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களைப் பெற்றுத்தர தயாராகவுள்ளோம்"**



Mr.Ravi Chandaran
(Country Director of
IDP Education, Sri Lanka)

**எமது சேவைகள் தொடர்பான தகவல்களுக்கு:**

Web site: www.idp.com

Address: No.567, 2B (2nd floor), Hospital Road, Jaffna

Telephone: 021 731 0999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்காபிஷேகம்

யாழ்., ஜன.12
அரியாலை - வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகத் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பூசைகளைத் தொடர்ந்து மு.ப. 9.30 மணிக்கு திரவிய அபிஷேகம் நடைபெற்றுப் பின்னர் 1008 சங்காபிஷேகப் பூசை நடைபெறும். மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார்.
(ச-45-10)

## கற்றல் உபகரணம் வழங்கிவைப்பு

யாழ்., ஜன.12
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 23 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.
சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களின் கல்விகற்கும் பிள்ளைகளுக்கே அவை கையளிக்கப்பட்டன. (ச-25,17)

## சிறுவர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்., ஜன.12
சுழிபுரம் மேற்குப் பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சுழிபுரம் மேற்குக் கலைமகள் முன்பள்ளி மாணவர்களுக்கு பல் துலக்குவதன் முக்கியத்துவமும், பல்துலக்கும் படிமுறையும் பற்றிசெயன்முறை ரீதியாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பயிற்றுவிக்கப்பட்டது.
(ச-45-125)

## மரண அறிவித்தல்



### ஜெயசிங்கம் பரமேஸ்வரி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசிங்கம் பரமேஸ்வரி அவர்கள் கடந்த 09.01.2025 வியாழக்கிழமை மகிமைக்குள் சென்றார்.

அன்னார் திரு. திருமதி சங்கரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செபமாலை தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னத்தம்பி ஜெயசிங்கம் (J.S கராஜ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (13.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 256 7330

(CS/2259) J-1

## யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி
## பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

தலைமை : திரு. செ.பேரின்பநாதன் (தலைவர்/ அதிபர்)
இடம் : கல்லூரி நாகேந்திரராசா மண்டபம்.
காலம் : 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப 9.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- மௌன வணக்கம்
- தலைமை உரை
- 150 ஆண்டு நிறைவு விழா செயற்பாடு பற்றிய விபரம் தெரிவித்தல்
- 150ம் ஆண்டு இறுதி மூன்று நாள் நிகழ்வு பற்றி ஆராய்தல்
- தாபகர் நினைவு சிலை அமைத்தல் பற்றி ஆராய்தல்

மேற்படி கூட்டத்திற்கு பழைய மாணவர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு. செ.பேரின்பநாதன்
தலைவர்

திரு. ம. ஸ்ரீபாஸ்கரன்
செயலாளர்

(CR/44094) J-1

## புளோரன்ஸ் நேர்சிங் முதியோர் பராமரிப்பு இல்லம்



**எங்களுடைய சேவைகள்**

- நீண்ட கால படுக்கை நோயாளிகளை சுத்தமாக பராமரித்தல்
- அங்கம் இழந்தவர்களை அன்பாக பராமரித்தல்
- தனிமையில் மன அழுத்தத்தில் வாழ்பவர்களை பராமரித்தல்
- உங்களுடைய தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக பெற்றோரை கவனிக்க முடியாதவர்கள் எங்களிடம் அனுமதியுங்கள்.
- விடுமுறைக்காக வெளியூர் செல்பவர்கள் நாட்கள் அடிப்படையிலும் வார அடிப்படையிலும் எம்மிடம் விட்டுச் செல்லலாம்.

மிகவும் குறைவான கட்டணத்தில் நிறைவான சேவைகள்

தொடர்புகளுக்கு
077 718 6438 / 077 482 4473
கந்தரோடை சுன்னாகம் (வுஞ்ஜர் அம்மன் கோவிலடி)

(CS/57185) J-1

## Jaffna College - Vaddukoddai
## Vacancy – Visiting Football Coach

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for a passionate, dynamic, inspirational and hard-working individual for the above position.

### Applicants should

- possess the minimum Level D coaching qualification with 3 years' experience.
- be an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics.
- be computer literate.
- be able to work with the college administration in developing football at Jaffna College.

**Closing date for applications 25.01.2025**

Applications with the names of two non-related referees should be sent to **hr@jaffnacollege.lk**

**Only short listed candidates will be called for an interview.**

**Principal**

(cr.44093) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 04 . 1949



மறைவு
11 . 01 . 2025

### சச்சிதானந்தம் செல்வராணி (பவளம்)

(ஓய்வுநிலை லிகிதர் கூட்டுறவுக் கிராமிய வங்கி
தென்மராட்சி மேற்கு, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - கைதடி)

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் செல்வராணி (பவளம்) நேற்று (11.01.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சச்சிதானந்தத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா, புவனேஸ்வரி, சீதேவிப்பிள்ளை, ஞானலோகசண்முகசிங்கம் மற்றும் அகிலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரிஷிகேசன் (ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி), சுலக்சனா (கனடா), தர்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், ராதிகா, வரதராயன் (கனடா - மாதகல்), சத்தியரூபன், தாரணி, பூங்கோதை, சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனுரங்கா, சுதர்சினி, தயாளினி, தமிழினி ஆகியோரின் அன்புப் பெரியதாயும், சிவானந்தசோதி, செல்வரத்தினம், தங்கராசா, சரஸ்வதி, விஜயலட்சுமி, கங்காதரன் ஆகியோரின் மைத்துனியும், விஷாளி, அஸ்வின், புருசோத், பிரவீன், தஸ்வின், ரிஷாங்கி, அப்சயன், அக்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவில் வீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 206 8760

(cs.57183) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உங்களிடம் கற்றுக்கொள்ளும் மனம் இருந்தால்
நீங்கள் முட்டாள்களிடமிருந்துகூட பாடம் கற்கமுடியும்;
அந்த மனம் இல்லாவிட்டால் உங்களால் புத்தனிடமிருந்துகூட
எதையும் கற்கமுடியாது.

—ஓஷோ—

# கழுத்தறுக்கும் கடன்கள்!

நுண்நிதிக்கடன்களால் கடந்த சில ஆண்டுகளில் சுமார் 200 பெண்கள் தம் உயிரை மாய்த்துள்ளனர் என்றவாறாகத் தேசிய மகளிர் ஒன்றியம் அறிக்கையிட்டிருக்கின்றது. அத்துடன், இலங்கையில் நுண்நிதிக்கடனாளிகளாக உள்ள 28 லட்சம் பேரில் 24 லட்சம் பேர் பெண்கள் என்ற தகவலையும் அந்த அமைப்பு பகிரங்கப்படுத்தியிருக்கின்றது. நுண்நிதிக்கடன்களை வழங்குவது தொடர்பிலும் அவற்றைத் திரும்பப் பெறுவது தொடர்பிலும் இதுவரை எந்தக் காத்திரமான பொறிமுறையும் இலங்கை அரசால் வகுக்கப்படவில்லை. 30 ஆண்டுகாலப் போர் காரணமாக இலங்கையில் ஏராளமான குடும்பங்கள் குறிப்பாக பெண் தலைமைக் குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ள பெண் தலைமைக் குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்கள் வடக்கு கிழக்கைச் சார்ந்தவை. இவ்வாறு வறுமையின் பிடியிலுள்ள குடும்பங்களைத்தான் மேலும் மேலும் இலக்குவைத்து இரையாக்கிச் சாகடிக்கின்றன இந்த நுண்நிதி நிறுவனங்களும், அவற்றின் கடன்களும்.

வாழ்வாதாரத்துக்கான எந்தப் பிடிமானமும் இல்லாத நிலையில், பெண் தலைமைக் குடும்பங்கள் பலவற்றின் ஒரே தெரிவாக நுண்நிதி நிறுவனங்கள் அமைந்துவிடுகின்றன. நிறுவனங்களும் அந்தக் குடும்பங்களை எவ்வளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றன. தாம் கடன் கொடுக்கும் குடும்பங்கள், அந்தக் கடனைத் திரும்பச் செலுத்தக்கூடிய இயலுமையில் உள்ளனவா? என்ற குறைந்தபட்ச எண்ணம்கூட நுண்நிதி நிறுவனங்களுக்கு இருப்பதில்லை. பின்னர், அந்தக் கடன்களுக்கான வட்டி, வட்டிக்கு வட்டி என்று அனைத்தும் சேர்த்து 'குருவியின் தலையில் பனங்காயாக' அந்தக் குடும்பங்களை நெருக்கும்போது மூச்சை நிறுத்துவதே முடிவாக அமைந்துவிடுகின்றது.

நாட்டின் பொருளாதாரம் கிட்டத்தட்ட முடங்கியிருக்கின்றது. பணத்தை ஈட்டுவதற்கோ அல்லது பெருக்குவதற்கோ சாத்தியப்பாடுகள் இல்லாத நிலையில், எவ்வாறு குறித்த பயநர்கள் (கடன்காரர்கள்) கடன்களைத் திரும்பச் செலுத்துவார்கள் என்ற குறைந்தபட்சப் புரிதல்கூட இல்லாத நிலையில் கடன்களை திரும்பக் கேட்டு குறித்த நிறுவனங்களால் பெண் தலைமைக் குடும்பங்கள் பலவும் வதைக்கப்படுவது உலகறிந்த கதை. ஆனால், அந்த நிறுவனங்களின் இந்த இறுகிய மனப்பான்மைக்கு ஒரு இரும்புப் பிடியை போடமுடியாமல் இருப்பது ஆட்சியாளர்களின் அவலத்தின் உச்சம். உரிய திட்டங்கள் இப்போதாவது வகுக்கப்படாவிட்டால் இதுபோன்ற 'சர்வதேசத் தலைகுனிவு' இலங்கைக்குத் தொடர்கதையாகவே அமையும். ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நுண்நிதி தொடர்பில் சில சட்டங்களை இயற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. அவ்வாறான நகர்வுகள் மூலம், 'ஒப்பற்ற உயிர்காக்கும் பணியில்' அநுர தரப்பு ஈடுபடுமானால், நிச்சயம் அந்த நடவடிக்கையை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும்.






## 90 வகை மருந்துகள் விரைவில் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 12
90 வகையான மருந்துகளின் விலைகளைக் குறைப்பதற்கு ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. சில மருந்து நிறுவனங்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்குகளால் மருந்துகளின் விலைகளைக் குறைப்பதில் இடையூறு ஏற்பட்டுள்ளது.
அதற்கமைய நகர்த்தல் பத்திரம் ஊடாக விடயங்களை முன்வைத்து அதன்பின்னர் மருந்துகளின் விலைகளைக் குறைக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## சிறையிலுள்ள மரங்கள் தறிப்பு

கொழும்பு, ஜன. 12
சிறைச்சாலைகளிலுள்ள மரங்களைத் தறிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
இம்மாதம் முதலாம் திகதி மாத்தறைச் சிறையில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் இரு கைதிகள் உயிரிழந்தனர் என்பதோடு பதினொரு கைதிகள் காயமடைந்துமிருந்தனர். அதனையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-22,6)

## வெலிக்கடைக்கு துமிந்த மாற்றம்

கொழும்பு, ஜன. 12
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வா சிறைச்சாலை மருத்துவமனையில் இருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குறித்த தகவலை சிறைச்சாலைகள் ஆணையாளரும் பேச்சாளருமான காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## பயிற்சி ஆசிரியர்கள் பரீட்சைக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜன. 12
ஆசிரியர் கல்லூரிகளின் பட்டதாரி அல்லாத பயிற்சி ஆசிரியர்களுக்கான பரீட்சையை, மே மாதத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இணையவழியில் ஏற்றுக்கொள்ளப்படும். நிகழ்நிலையில் (Online) மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic க்குச் சென்று வழங்கப்பட்ட பயநர் பெயர்கள் மற்றும் கடவுச்சொற்களைப் பயன்படுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பேருந்து விபத்து! 13 பேர் படுகாயம்

கொழும்பு, ஜன. 12
கொழும்பிலிருந்து பசறை நோக்கிச் சென்ற தனியார் பேருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் பசறையில் உள்ள 15ஆவது தூண் பகுதியில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 13 பேர் காயமடைந்தநிலையில் பசறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாரதியின் தூக்கத்தாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை
திங்கட்கிழமை - மார்கழி - 29
13.01.2025
சுபநேரம் : 12.33 - 02.03
ராகுகாலம் : 08.03 - 09.33

# பாஸ்மதி அரிசியில் மோசடி



கொழும்பு, ஜன. 12

பாஸ்மதி அரிசி என்ற பெயரில் தரம் குறைந்த அரிசி இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் பாஸ்மதி அரிசிக்கு 300 ரூபா வரி அரசாங்கம் விதித்துள்ளது.

இந்த நிலையில் பாஸ்மதி அரிசிக்கு நிகரான அரிசிக்கு 65 ரூபா வரிசெலுத்தி இறக்குமதி செய்யப்பட்டு பாஸ்மதி அரிசி என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது.

இது தொடர்பில் சுங்கத் திணைக்களத்தி டம் வினவிய போது, அரிசியின் தரம் பற்றிப் பரிசோதிப்பதற்கு தமக்கு சட்டஅதிகாரம் இல்லையெனவும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை தான் அரிசியின் தரத்தை பரிசோதிக்க வேண்டுமெனவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-22,6)

# அனுமதியின்றி மருந்துகள் நாட்டில் பரவலாக விற்பனை

கொழும்பு, ஜன. 12

**அனுமதியின்றி நாட்டினுள் எடுத்துவரப்படும் மருந்துகள் நாடுபூராகவும் விற்பனை செய்யப்படுகின்றன என்று சமூகசேவை நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**



50 வகையான மருந்துகள் இவ்வாறு சட்ட விரோதமாக எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. இதனூடாக மருத்துவ மாபியாக்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் தொடர்பு இருக்கிறதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

எனவே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சமூகசேவை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

(ச-22,6)

# சாவகச்சேரி மருத்துவமனையில் 4 துறைகளுக்கும் மருத்துவ நிபுணர்கள்

சாவகச்சேரி, ஜன.12

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நான்கு பிரதான துறைக்கான மருத்துவ நிபுணர்கள் கடமையாற்றுக்கின்றனர் என்று மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் கோ. ரஜீவ் தெரிவித்துள்ளார்.

தற்போது 'ரைப் B' ஆதார மருத்துவமனைக்கான சகல சேவைகளையும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமருத்துவ நிபுணர், குழந்தைநல மருத்துவ நிபுணர், மகப்பேற்று மருத்துவ நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவமனையில் கடமையாற்றுகின்றார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ச-66)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
சுலபமாக இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (26 வருட அனுபவம்)
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை
தொடர்பு: 077 675 1649

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ் கச்சேரி சுற்று வட்டாரத்தில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 077 870 5355

# திருநெல்வேலி 'யாழ்கோ' செயற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 12

திருநெல்வேலிகிழக்கு, கோப்பாயிலுள்ள யாழ்கோ பால் உற்பத்தித் தொழிற்சாலையின் புனரமைப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்ட நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் வழமை போல் பாற்பொருள்களை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-25)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.12.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் மார்க்கண்டு குகதாசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.01.2025) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிரியைகள் நாளை (13.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

96, பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(CS/57187) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 06 . 1964



மறைவு
10 . 01 . 2025

### கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)

**(வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், உரிமையாளர் SKAT கேபிள் விசன் கட்டப்பிராய் , வரதன் எலெக்ரோனிக், சரண்யா கொமினிக்கேசன்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 66 சீனியர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்) நேற்றுமுன்தினம் (10.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-கண்ணம்மா தம்பதியின் அன்பு மகனும், நவரத்தினம்-மனோன்மணி தம்பதியின் மருமகனும் கலாராணியின் பாசமிகு கணவரும், சுகிர்தா (சிரேஸ்ட விரிவுரையாளர் தொழிநுட்பப்பீடம் யாழ் பல்கலைக்கழகம்), சரண்யா (Trendy Jaffna, துளசிகா (BOC Jaffna), அபிநந்தன் (4ம் வருட முகாமைத்துவபீடம் யா.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜராஜ், ரமேஸ்குமார், லிங்கராஜ் (BOC) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷா பிரஜித், பிரகதி ஆகியோரின் பேரனும், புஸ்பமாலா, ஸ்ரீஸ்காந்தன் (பத்திரிகை முகவர் புங்குடுதீவு), இரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), காலஞ்சென்ற ஜீவமாலா மற்றும் சிறிபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்புச்சகோதரனும் இரத்தினவேல் (அத்தான்), வசந்தா, தர்மசேனன் (பெயின்ரர்), விஜயலலிதா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் அருளானந்தம், கிருபானந்தன், திருவேணி, மனிமேகலா, சுமதி, அகிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2025) ஞயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் (கைலை வாசம்) பிற்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கைலை வாசம்
இல 66, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 732 0241, 076 260 5226

(CS 57174) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னிந்திய திருச்சபையின் சுப்பிரமணியன் கனகம் ஞாபகார்த்த மகிழ்ச்சி இல்லத்துக்கு, உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் சக்கரநாற்காலி ஒன்றை வழங்கினார். (ச-25, 125)

# விரைவில் திறக்கப்படவுள்ள ஆழிக்குமரன் நீச்சல்தடாகம்

**யாழ்ப்பாணம், ஜன. 12**

**ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவு நீச்சல் தடாகத்தை இந்த மாதத்துக்குள் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வல்வெட்டித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த நீச்சல் தடாகத்துக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு நிதியமைச்சின் நிதித்திட்டத்தின் கீழ் அடிக்கல் நடப்பட்டு கடந்த 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி அப்போது அமைச்சராக இருந்த மங்கள சமரவீர வினால் திறந்துவைக்கப்பட்டது. தற்பொழுது குறித்த நீச்சல் தடாகம் இயங்காது இருப்பதாகவும் பராமரிப்பின்றி நீச்சல் தடாக வளாகத்தின் கூரைகள் கழன்று செல்வதாகவும் குறித்த தடாகத்தை மீளச் செயற்படுத்துமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் . இதுதொடர்பில் நாம் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு அறிக்கையிட்டுள்ளோம். இம்மாதத்தில் நீச்சல் தடாகத்தை இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ச-125)



ஒட்டுசுட்டான்

## பிரதேச செயலாளராக நிசாந்தன் கடமையேற்பு

**முல்லைத்தீவு, ஜன.12**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் புதிய செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் கமநலசேவைகள் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராகப் பணியாற்றிய இவர் ஜனாதிபதி செயலகத்தில் உலக உணவுத் திட்டப் பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-125,27)




## தெங்குச் செய்கைக்கு காசோலைகள் வழங்கல்

**கிளிநொச்சி, ஜன. 12**

தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெங்குச் செய்கையாளர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது 44 தெங்குச் செய்கையாளர்களுக்கு ஒரு தென்னைக்கு 100 ரூபா வீதம் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் உதவிப்பொதுமுகாமையாளர் தேவராஜா வைகுந்தனால் காசோலைகள் வழங்கப்பட்டன. (ச-25, 113)

## விபத்தில் ஒருவர் பலி

**கொழும்பு, ஜன.12**

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த அதிசொகுசு பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் ஏ-9 பிரதான வீதியில், மதவாச்சி ஹமல்கொல்லேவ பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. ஹமல்கொல்லேவ, ரம்பாவப் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய குடும்பஸ்தரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் பஸ்ஸின் சாரதியைப் மதவாச்சிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச-இ)

## அறுவடை விழா!

**மன்னார், ஜன. 12**

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை பரங்கிகமம் பகுதியில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் உணவுப் பண்பாட்டியல் தொடக்க விழாவான அறுவடை விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர். க. கனகேஸ்வரன் கலந்துகொண்டு அறுவடையைத் தொடங்கி வைத்தார். (ச-22,56)



## வடமராட்சி மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகள் வழங்கல்

**யாழ்ப்பாணம், ஜன. 12**

வடமராட்சி கிழக்கு தாளையடி நன்னீர்த் திட்ட நிறுவனத்தால் 40 பயனாளிகளுக்கு மீன்பிடிப் படகுகள் வழங்கப்படவுள்ளன. அதன் முதற்கட்டமாக 20 பயனாளிகளுக்கு சமாசத் தலைவர் த.தங்கரூபனால் தாளையடி நன்னீர்த் திட்ட அலுவலகத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை படகுகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 27)



## பொங்கல் பொதி வழங்கிவைப்பு

**யாழ்ப்பாணம்,ஜன.12**

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்புப் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர், பணியாளர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 3000 ரூபா பெறுமதியான பொங்கல் பொதியை வழங்கியுள்ளது.

இந்தப் பொதி சங்கத் தலைவர் தே. கிருஷ்ணராஜா தலைமையில் சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ச-33- 63,17)







## பொங்கல் பானை வழங்கும் நிகழ்வு

**கிளிநொச்சி, ஜன.12**

தைத்திருநாளை முன்னிட்டு கிரிவலம் அறக்கட்டளையால் பொங்கல் பானை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பரந்தன், குமாரபுரம், உமையாள்புரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கு பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25. 113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- **077 281 1234**

(CS/2177)J-1

## மருந்தாளர்கள் தேவை

மன்னாரில் உள்ள பிரபல மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர்கள் தேவை.
ஆண். பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உணவு. தங்குமிடம் வழங்கப்படும்

**077 393 6059**

(cr. 44095) (N-1)

## வேலை வாய்ப்பு

*கல்வி சார் ஊழியர்கள்*

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் சுயவிபரக்கோவையையும். சான்றிதழ்களையும் அதிபர். உடுவில் மகளிர் கல்லூரி. உடுவில் என்ற முகவரிக்கு 23.01.2025 முன்னதாக அனுப்பிவைக்கவும்.

1. **அழகியல்** - Art (Crade 6 - 13)
2. **சங்கீதம்** - Music (Crade 6 - 13)
3. **கணிதம்** - Maths (Crade 6 - 11 Tamil & English Medium)

**அதிபர்**

(cr.44091) (N-1)

## வெல்டிங் பயிற்சியாளர்கள் தேவை

யாழ்நகருக்கு அண்மையில் உள்ள வெல்டிங் தொழிற்சாலை ஒன்றிற்கு நற்குணமுள்ள 24 வயதிற்குட்பட்ட ஆண் பயிற்சியாளர்கள் தேவை.
பயிற்சிக்காலத்தில் தகுந்த கொடுப்பனவு வழங்கப்படும்

**077 445 8582**

(Cs 57179) N-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V) 1986 இல் பிறந்த திருவோணம் அரச பதவிபார்க்கும் விவாகரத்து பெற்ற மணமகனுக்கு ஏற்ற மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**077 636 5166**

(cs. 57177) (N-1)



# செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை

චෙල්වනායගම් අනුස්මරණ භාරකාරත්වය| CHELVANAYAKAM MEMORIAL TRUST
THANTHAI CHELVA AUDITORIUM – No -114, RAJENDRA PRASAD ROAD, JAFFNA

0213147070 |0743060566| cmt.jaffna2010@gmail.com | www.thanthaichelva.lk

Reg. No.: TRUST 05/28 (14-10-2010

# TENDER NOTICE

The Chelvanayakam Memorial Trust (CMT) is a charitable trust established in 2010 and working with a vision of "A just and peaceful society where groups with diverse identities live in dignity, equality of opportunity and respect for plurality".

CMT works in the areas of include; Education, promoting nonviolence & Enhancing governance. CMT established & manages the Thanthai Chelva Auditorium (TCA) at Jaffna Central College serving the school and functioning as a public space partnering the educational, social & cultural reawakening of the war affected society.

| NO | Items | Unit | Quty | Brand | Price | Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | 20 Liter whether shield primer BW (EG: -External dam seal Primer) | Nos | 25 | | | |
| 2 | 20 Liter whether shield primer BW (EG: -External Apex ultima) | Nos | 28 | | | |
| 3 | 20kg External Putty | Nos | 10 | | | |
| 4 | 20 Liter Internal paint BW (glo) | Nos | 23 | | | |
| 5 | Water based Epoxy Floor paint (Gray) | Nos | 25 | | | |
| 6 | Barma teak water-based stain | Liter | 28 | | | |
| 7 | water based Top coat wood care (mat) | Liter | 16 | | | |
| | Total | | | | | |

| S.No | Description Of Work | Unit | Qty | Rate | Amount |
|---|---|---|---|---|---|
| 01 | Surface, Prepare for Old Work, cleaning with water, | P-Sum | | | |
| 02 | Prepare and apply one coat of internal primer and two coats of emulsion paint (B.W) to walls | $m^2$ | 2715.90 | | |
| 03 | Prepare and apply one coat of external Dam seal and two coats of weather shield Apex ultima paint (B.W) to external walls (Texter design.) | $m^2$ | 2918.60 | | |
| 04 | Painting, epoxy floor paint including washing cleaning & smoothing down 2 coats. | $m^2$ | 100 | | |
| 05 | Stage -Timber water-based Primer 2 coats, Top coat painting including repairing and pasting (Apply the easy cut), washing cleaning & smoothing down with sandpaper, 2 coats. | $m^2$ | 193 | | |
| 06 | Painting steel work, 1 coat, with anticorrosive (QD primer) paint including removing scares and wire brushing. (Old work) | $m^2$ | 14 | | |
| 07 | Rectifying Cracks & unsatisfied surface as per instruction of the Engineer | P.Sum | | | |
| 08 | Rectifying Waterproofing surface as per instruction of the Engineer | P.Sum | | | |
| | Sub total | | | | |

- **Delivery:** At site in Jaffna within 10 days of confirmation of order.
- Prices should be all inclusive (including VAT) transport and installation for generator.
- **Strating work:** At site in Jaffna within 10 days of confirmation of sign agreement.
- **Work Duration:** - Two-month period

The sealed Tender Quotations should be on the suppliers' letter head and to be submitted along with the all details including quality certificates on or before 20th January 2025 in the Tender Box, addressed to the Auditorium Manager, Thanthai Chelva Auditorium, No. 114, Rajendra Prasad Road, Jaffna. Phone: +94 21 2227071.

(Cs 57152) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'ஏ-ஐ' தொழில்நுட்பத்துக்கு தேசிய கொள்கைத் திட்டம்

கொழும்பு, ஜன. 12
செயற்கை நுண்ணறிவு தொடர்பாக தேசிய கொள்கை திட்டம் ஒன்றை வகுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக பொதுமக்களின் அபிப்பிராயங்கள் பெறப்படவுள்ளது.

இதுதொடர்பாக கருத்துகளைத் தெரிவிக்க விரும்புவோர் மார்ச் 14 ஆம் திகதிக்கு முன்பாக தமது அபிப்பிராயங்களை அனுப்பிவைக்குமாறு டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். (ச-22.6)

## 10 நாள்களில் மூவர் பலி

கொழும்பு, ஜன. 12
இந்த ஆண்டின் முதல் பத்து நாள்களில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடைய துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் காரணமாக மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அம்பலாங்கொடை, கல்கிஸ்ஸ, திக்வெல்ல, பதவிய, கம்பஹா, கந்தான, மீகொட, மருதானை, மீட்டியாகொட, ஜாஎல, காலி, சீதுவ, வெலிகம மற்றும் அஹுங்கல்ல உள்ளிட்ட பல பகுதிகளில் இந்தத் துப்பாக்கிச்சூடுகள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## கோப் குழு நியமனம் எதிர்க்கட்சி எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 12
அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவைப் புறக்கணிக்க எதிர்க்கட்சித் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் மட்டுமே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் பாரம்பரிய நடைமுறைகள் மீறப்பட்டதால் இந்த முடிவுக்கு வந்துள்ளோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## இலங்கையில் ஹிந்தி கல்வி

கொழும்பு, ஜன. 12
இலங்கையில் ஹிந்தி கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரு படியாக, திறந்த நிலை மற்றும் தொலைதூரக் கல்வி மூலமான ஹிந்தி சான்றிதழ் கற்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடத்திட்டத்தை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா ஆரம்பித்து வைத்தார். (ச-இ)



## டொலர் வருமானம் கடந்தாண்டு உயர்வு

கொழும்பு, ஜன. 12
2024 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் மொத்த மதிப்பு 6,575.4 மில்லியன் அமெரிக்க டொலர் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 10.1 வீத அதிகரிப்பாக பதிவாகியுள்ளது.

அதேவேளை டிசெம்பர் மாதத்தில் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு மொத்தம் 613.8 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது. (ச-இ)




## 12 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்த சிறுமி சாவு



கொழும்பு, ஜன. 12
பொரளையில் உள்ள 24 அடுக்கு மாடி குடியிருப்பின் 12 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்த 16 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் ஆலயங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் ஆலயங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்தகாரியம் அனுகூலமாக முடியும். உடல் நலனில் கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** அரசாங்க அதிகாரிகளின் ஆதரவால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தையின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்வீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். மறைமுக எதிரிகளின் தொல்லைகள் விலகும்.

**கன்னி:** தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படாது. ஆனால், மற்றவர்களுடன் வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**துலாம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். காரியங்கள் இழுபறிக்குப் பிறகே முடியும். தாய்மாமன் வழியில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை துணிந்து எடுப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாகும். உறவினர்களால் சில நன்மைகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு நீண்டநாளாகத் தடைப்பட்டு வந்த தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தெய்வ அனுக்கிரகத்தால் காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டுவருவார்கள். எதிர்பாராத விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.





# பொங்கல் பானை விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம், ஜன. 12

தைத்திருநாளை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் பொங்கல் பானை விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. அலுமினியம் மற்றும் மண்பானைகள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இதேசமயம் நல்லூரில் பொங்கலுக்கென சிமெந்தினால் செய்யப்பட்ட அடுப்புகள் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-25, 17-125-9)



# யாழ்ப்பாணம் - கேவில் புதிய பேருந்து சேவை

யாழ்ப்பாணம், ஜன. 12

வடமராட்சி கிழக்கு தனியார் பேருந்துச் சங்கத்தினரால் வடமராட்சி கிழக்கு கேவில் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையில் மேலுமொரு பேருந்துச் சேவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்துச் சேவையானது காலை 9.45 மணிக்கு கேவிலில் இருந்து புறப்பட்டு மருதங்கேணி, புதுக்காடு வழியாக யாழ்ப்பாணம் சென்றடைந்து மீண்டும் பிற்பகல் 3.35 மணிக்கு யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கேவிலைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,27)

# முல்லை மாணவர்களின் வெளிக்களப்பயணம்

முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு 'அறிவியல் அமுது' கல்வி அறக்கட்டளையினர், முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்துக்கு 3 ஆம் தவணை ஆய்வுகூடப் பயிற்சிக்காக இலவசமாக அழைத்துச் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 6 மணிக்குப் பயணம் ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குப் பயணம் நிறைவுபெறும்.

அதேபோன்று ஞாயிற்றுக்கிழமை பயணத்தில் மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து காலை 6 மணிக்கும், மாங்குளம் ம.வி.யிலிருந்து காலை 6.20க்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலிருந்து காலை 7 மணிக்கும், உடையார்கட்டு ம.வி. யிலிருந்து காலை 7.15 க்கும் , விசுவமடு ம.வி. யிலிருந்து காலை 7.30 க்கும் பேருந்துகள் புறப்படும்.

இவ்வருடம் க.பொ.த. உயர்தரத்தில் கணிதம் மற்றும் உயிரியல் பிரிவுகளில் கல்வி கற்போர், 2 ஆவது மற்றும் 3 ஆவது தடைவையாக பரீட்சை எழுதவுள்ளோர் இந்தக் களப்பயணத்தில் பங்குகொள்ளலாம்.

பங்குபற்றுவோர் சீருடையுடன் வருகை தரவேண்டும் என்றும் களப்பயணத்துக்குத் தேவையான குறிப்புக் கொப்பி உட்பட ஏனைய உடைகள் உள்ளிட்ட பொருள்களையும் கொண்டுவருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெளிக்கள ஆய்வுப் பயிற்சிக்கு யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் வளவாளர்களாக செயற்படுவர். (ச-25)

தொடர்...

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் தொடர் திருட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான இளைஞர் நேற்றுக்காலை இணுவில் கந்தசுவாமி ஆலய வளாகத்தில் உள்ள அம்மன் ஆலய உண்டியல், இணுவில் உபதபால் அலுவலகம், இணுவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம், தனியார் மருந்தகம் மற்றும் வீடு என்பவற்றின் கதவை உடைத்துத் திருட்டில் ஈடுபட்டுள்ளார். மருந்தகத்தில் மாத்திரம் 2 லட்சம் ரூபா திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வீடியோக்கள் மற்றும் ஒளிப்பட ஆதாரங்களை அடிப்படையாக வைத்து சந்தேகநபரை அடையாளப்படுத்தி அவரைக் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

யாருடைய...

ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் ஆகியோரை மீண்டும் ஒன்றிணைப்பதற்கு அண்மைக்காலமாக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர்கள் பலரும் இந்த நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ரணிலும் சஜித்தும் இணைந்தால்கூட தமக்கு எந்தவொரு சவாலும் இல்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களுக்காகச் செயற்பட்டுவருகின்றது. மக்களின் தேவைகளே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்கள் எம்முடன் உள்ளனர். எனவே, ரணிலும் சஜித்தும் இணைவதைப்பற்றி நாம் கருத்தில்கொள்ளவில்லை. தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும். உள்ளூராட்சித் தேர்தலை இலக்குவைத்து 'தூய இலங்கை' திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை" - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை வருட காலத்தில் 20 சதவீதம் மின்துண்டிப்பு

## தெளிவூட்டலின்மையால் இந்தநிலை விரிவுரையாளர் கோபிசங்கர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 12**

**கடந்த ஒன்றரை வருடகாலத்தில் இலங்கையிலுள்ள மின்பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 20 சதவீதம் மின்துண்டிப்பு இடம்பெற்றுள்ளது. பொதுமக்களுக்கு மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பில் முறையான தெளிவின்மை வழங்கப்படாமையே இதற்கு வழிவகுக்கின்றது.**

-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறை விரிவுரையாளர் கோபிசங்கர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரவு வேளைகளில் தொழிற்சாலை இயங்குவதில்லை. ஆனால் வீட்டுப்பாவனை அதிகளவில் காணப்படும். இங்கே அதிகளவு செலவீனம் வீட்டுப்பாவனை மூலமே மின்சாரசபைக்கு ஏற்படுகின்றது. இது குறித்த முறையான தெளிவுபடுத்தலை பொதுமக்களுக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு வழங்கவேண்டும்.

2023 ஆம் ஆண்டு 9 இலட்சத்து 70 ஆயிரத்து 933 பாவனையாளர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் வரை 6 இலட்சத்து 28 ஆயிரத்து 286 பாவனையாளர்களின் மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது. 7 மில்லியன் மின்பாவனையாளர்களைக் கொண்ட இலங்கையில் ஒன்றரை வருடத்தில் சராசரியாக 20 சதவிதத் துண்டிப்பு இடம்பெற்றுள்ளது.

இது சாதாரண மக்களின் வறுமை மற்றும் பணத்தைச் செலுத்தாத காரணத்தால் நிகழ்ந்திருக்கலாம் .

இலங்கை மின்சாரசபையின் அண்மித்த கட்டண முன்மொழிவு வாடிக்கையாளரைப் பாதிக்காத வண்ணம் தீர்மானம் எடுக்கின்றபோதே அது பொருளாதார ரீதியில் ஸ்திரத்தைப் பேணும். ஆகவே இது தொடர்பில் பொதுமக்களுக்கு முறையானவகையில் ஆணைக்குழு தெளிவுபடுத்தவேண்டும் - என்றார். (ச-125)

நீதிமன்றுக்கு இடையூறாக

## பட்டாசு கொளுத்திய இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 12

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பட்டாசு கொளுத்திய இருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மரணச்சடங்கு ஒன்றின்போது பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் அதிக சத்தமாக பட்டாசுகளைச் சிலர் கொளுத்திவெடிக்கவைத்தனர்.

அதிக சத்தம் காரணமாக வழக்குகளை நடத்த முடியாது 25 நிமிடங்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தின் செயற்பாடுகள் ஒத்திவைக்கப்பட்டன.

அதனையடுத்து இதுதொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பட்டாசு கொளுத்திய இருவரை கைதுசெய்து பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். இந்த வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)



## கனடா அமைச்சர் ஹரியுடன் தமிழரசு எம்.பி.க்கள் சந்திப்பு

கொழும்பு, ஜன.12

கனடா நாட்டின் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரிக்கும் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல், கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னரான தமிழ் மக்களின் நிலைமை, தற்போதைய ஆட்சியாளர்களின் அரசியல் போக்கு மற்றும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன

கலந்துரையாடலில் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், சி. ஸ்ரீநேசன், ஸ்ரீநாத், குகதாசன், து. ரவிகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,110)

## கசிப்புடன் ஒருவர் சுழிபுரத்தில் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.12

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் ஒரு போத்தல் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-45-27)

## சிறுவர் பூங்கா திறந்துவைப்பு

சாவகச்சேரி, ஜன.12

சாவகச்சேரி நகரசபையினரால் நுணாவில் ஏற்றத்தடியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது. நகரசபையால் காணி கொள்வனவு செய்து சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 9)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 12

குருநகர்ப்பகுதியில் ஒரு கிராம் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்துள்ளனர். குருநகர்ப் பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்ட போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 12

கோப்பாய் வடக்கு இலுப்பையடி விநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு சிறப்பு பூஜை, மகேசுவரப்பூஜை ஆகியன இடம்பெற்று சுவாமி வீதி உலா வருவார் என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-25,17)



## குருபூசை நிகழ்வு

ஈழத்துச் சித்தர் நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வே. சிவகுருநாதன் தலைமையில் யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், சைவப்புலவருமான சு.தேவமனோகரன் கலந்துகொண்டு 'புராணபடன மகிமை' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். (ச-45-66)



## தமிழறிஞர் ந. கணேஸ்வரனுக்கு உலகத் தமிழ்ச் சாதனையாளர் விருது

யாழ்ப்பாணம், ஜன. 12

சமூக ஆர்வலரும் இளைப்பாறிய உதவிக்கணக்காளருமான அறிஞர் நவரத்தினம் கணேஸ்வரனுக்கு அவரின் தமிழ்மொழி சார்ந்த சமூக சேவைகளைப் பாராட்டி 'உலகத் தமிழ்ச் சாதனையாளர் விருது 2024' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. பாரதியாரின் 142 ஆவது பிறந்தநாளைமுன்னிட்டு சென்னைத் தமிழ்ச்சங்கம், உலகத் தமிழ்ச்சங்கம் மற்றும் மலேசியத் தமிழ்ச்சங்கம் ஆகியன இணைந்து இந்த வருடம் மலேசியாவில் நடத்திய மகாநாட்டிலேயே இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டது. (ச-25)

## மார்கழி திருவெம்பாவை

*யாழ்ப்பாணம், ஜன. 13*

சித்தன்கேணி சிவன் கோவில் மார்கழி திருவெம்பாவை பஞ்சரதபவனி இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆருத்ரா தரிசனம் நாளை திங்கள்கிழமை அதிகாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'கிளீன் சிறிலங்கா' திட்டம் மன்னாரில் தெளிவூட்டல்



யாழ்ப்பாணம், ஜன.12

'தூய இலங்கை' திட்டம் தொடர்பில் மன்னார் மாவட்ட அரச அதிகாரிகளுக்குத் தெளிவூட்டும் கருத்தரங்கு மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இதன்போது 'கிளீன் சிறிலங்கா' திட்டம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் திருமதி சாரதாஞ்சலி மனோகரன் கருத்துரைகளை வழங்கினார். (ச-25, 56)



# மாற்றுத்திறனாளிகளுக்கு பொங்கல் பொருள்கள்

கிளிநொச்சி, ஜன.12

புலம்பெயர்ந்து வாழும் சின்னத்துரை சண்முகலிங்கத்தின் நிதிப்பங்களிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு பொங்கல் பொருள்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 பயனாளிகளுக்கு 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதியும், பொங்கல் பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன.

வடமாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் கலந்துகொண்டார். (ச-45-27-113)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளிலான இரத்ததான முகாம் யாழ். பிரதேச செயலகத்தில் யாழ். பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25, 159)





# ஆன்மீக உரை

யாழ்ப்பாணம், ஜன.12

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை நடத்தும் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் 'பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும் பாடல்களும்' எனும் தலைப்பில் சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி ஆன்மீக உரை நிகழ்த்தினார். (ச-45-66)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பொருண்மியம் நலிவுற்ற 150 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் 'கிறிசலிஸ்' நிறுவனத்தினால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,9)



# மாற்றுத்திறனாளர்கள் முல்லையில் கௌரவிப்பு

முல்லைத்தீவு , ஜன. 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட மாற்றுவலுவுடையோர் செயலணியின் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர் ச.சதாகரன் தலைமையில் புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் கலந்துகொண்டார். நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச-22,19)

# பொங்கல் பொருள்கள் வழங்கிவைப்பு

பளை, ஜன.12

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொருண்மியம் நலிவுற்ற 110 குடும்பங்களுக்கு தைப்பொங்கலுக்குரிய பொருள்கள் இரட்டைக் கேணி அம்மன் கோவிலில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. புலம் பெயர்வாழ் நலன்விரும்பி ஒருவரின் நிதிப்பங்களிப்பில் அவை வழங்கப்பட்டன. (ச- 25, 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
09
.
12
.
1938



மறைவு
09
.
01
.
2025

### நல்லநாதன் நவமணி

சங்கானை சேர்ச் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லநாதன் நவமணி அவர்கள் கடந்த (09.01.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து-பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து நல்லநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சண்முகதாஸ், அருந்தவச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமுதினி, பகீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் துசானிக்கா, சினேகா, சஞ்ஜய், அருண், அஞ்சலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், குலசிங்கம், துரைசிங்கம் மற்றும் குமாரசிங்கம், பூலோகசிங்கம், பூபாலசிங்கம், சிவராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 370 5926 (சண்முகதாஸ்-மகன்)**
**070 392 8307 (செல்வி-மகள்)**

(CS 2265) P-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
26
.
03
.
1952



இறைவன் அடியில்
11
.
01
.
2025

### அமரர் சச்சிதானந்தம் செல்வராணி

நிர்வேலியைப்பிறப்பிடமாகவும் முழங்காவில் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் செல்வராணி அவர்கள் நேற்று (11.01.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா- சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வியும் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லையா-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் நல்லையா சச்சிதானந்தம் (முன்னாள் முழங்காவில் கிராம அலுவலர், ஓய்வு நிலை விவசாயப் போதனாசிரியர், வவுனியா மாவட்ட பயிற்சி நிலைய முன்னாள் முகாமையாளர் மற்றும் F.A.O நிறுவனத்தின் முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட உதவி அலுவலர்) அவர்களின் அன்பு மனைவியும் ஸ்றெனியா (லண்டன்), ஸ்றெயிலதரன் (பொறியியலாளர்-லண்டன்) கஜன் (IT பொறியியலாளர்- கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தாயாரும் தணிகாசலநாதன் (செல்வம்-லண்டன்), லக்ஷனா (லண்டன், முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்), மதுர்ஷா (கணக்காளர்-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசலட்சுமி, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் நடராசா, தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஷம்மியா, பிரித்தியா சரண்யா, சக்ஸ்யா, ஸகஷ்யா, கிதுஸ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நேசமலர், குணமலர், உருத்திராதேவி, ரஞ்சிதமலர், புஸ்பமலர், சற்குணானந்தம், தவச்செல்வி, கலைச்செல்வி, பாலசிங்கம், காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் செல்வகுமாரி, பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 711 5603, 077 402 5960**

(CS 2260) P-1

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/56378) P-1

**விற்பனைக்கு**

பெரிய இன நாய்கள் வளர்ப்பதற்குரிய பெரிய கூடு விற்பனைக்குண்டு.

**076 347 6690**

## ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்-2025

மேற்படி ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின்

**2025 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் (25.01.2025 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்ப்பானம் இந்துக் கல்லூரியில் குமராசுவாமி மண்டபத்தில் நடைபெறும்**

யாப்பு மாற்றங்கள் தொடர்பான பிரேரனைகள் இருப்பின் 20.01.2025ற்கு முன்னதாக செயலாளரிடம் (077 519 3669) கையளிக்கவும்.

**கணக்கறிக்கையினை பொருளாளரிடமும் (077 178 9546) பெற்றுக்கொள்ள முடியும்.**

(CS 2262) V-1

## கொள்ளை

யாழ். ஜன. 12

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில், ஓய்வுபெற்ற ஆசிரியரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள், அவரைக் கட்டி வைத்து விட்டு அணிந்திருந்த தோடு, மோதிரம், காப்பு, சங்கிலி என எட்டுப் பவுண் நகைகளைக் கொள்ளை யிட்டுச் சென்றுள்ளனர். (ம-23)

## மரண அறிவித்தல்

மலர்வு
12
.
09
.
1982



உதிர்வு
10
.
01
.
2025

### ரவீந்திரன் சுதாகர்

(R.S. ரெக்ஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம், புதுவீதியை பிறப்பிடமாகவும், அம்மன் வீதி கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ரவீந்திரன் சுதாகர் அவர்கள் நேற்று முன்தினம் (10.01.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் ரவீந்திரன்-திலகவதி தம்பதியின் கனிஸ்ட புதல்வனும் மயில்வாகனம்-நகுலேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும் தாரகாவின் அன்புக்கணவரும் லெசிக்கா, டயானிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபன், பாமினி, பிருந்தன், விஜதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனராஜன், தர்சிக்கா, பாமினி, ராஜ்குமார், நாயினிதேவி, கரிகரன் ஆகியோரின் மைத்துனரும் அப்சனா, அபிஷாந், அஸ்மிதன் ஆகியோரின் சித்தப்பாவும் சிவாஜினி, கரிராம், கர்சினி, அக்ஷயன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 697 2572**

(CS 2263) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி...

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்துக்கு, புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்வதற்காக குழப்பவாதிகள் சிலர் நேற்று மேற்கொண்ட நடவடிக்கையால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.
மாவீரர் குடும்பங்கள், முன்னாள் போராளிகளைக் கொண்ட பணிக்குழுவால் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த 2016ஆம் ஆண்டுமுதல் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஒன்பது வருடங்களாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அங்கு நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
எனினும், கடந்த வருடம் பிரதான சுடர் ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக துயிலுமில்ல நிர்வகிப்புத் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது. இதையடுத்து, தம்மை போராளிகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு என்று அடையாளப்படுத்திய நபர்கள் சிலர், கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்துக்கு, புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்வதற்கு நேற்று அழைப்பு விடுத்திருந்தனர்.
இதையடுத்து அங்கு சென்ற முன்னாள் போராளிகள், போராளிகளின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள், புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்ய முயற்சிகளை மேற்கொண்ட நபர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். புதிய நிர்வாகத்தெரிவு மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் எழவில்லை என்றும் தற்போது உள்ள நிர்வாகமே தொடர வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.
இதையடுத்தே இரு தரப்புக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு, அமைதியின்மை உருவாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்ற குழுவால், பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதையடுத்து, புதிய நிர்வாகத் தெரிவைக்கோரி குழப்பத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் வெளியேறிச் சென்றனர்.
மாவீரர் துயிலுமில்லங்களை அரசியல் மயப்படுத்தி, முன்னாள் போராளிகளுக்குள் முரண்பாடுகள் ஏற்படுத்துவது தொடர்பில் பலரும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். இந்தக்குழப்பங்களுக்குள் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சிநிரல் உள்ளது என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-113-18-110)

## நீதிபதி...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி பந்துல கருணாரத்னவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகத்தைக் கலைத்து, இடைக்கால நிர்வாகமொன்றை நியமித்தமை தொடர்பான வழக்கில் நீதிபதி பந்துல கருணாரத்னவின் செயற்பாடு விமர்சனத்துக்கு உட்பட்டிருந்தது.
குறித்த இடைக்கால நிர்வாகசபைக்கு எதிராக ஷம்மி சில்வா முன்வைத்த கோரிக்கையை ஏற்று நீதிபதி பந்துல கருணாரத்ன உடனடியாக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்.
மேலும் குறித்த வழக்கில் தனக்கு விருப்பமான முறையில் நீதிபதிகளை நியமனம் செய்திருந்தார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதையடுத்தே அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது.
நீதிபதி பந்துல கருணாரத்னவை கௌரவமான முறையில் விலகுமாறு அரசாங்கம் கோரியது என்றும், அவர் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ச-இ)

## உங்களுக்கு...

உங்களது மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள் என்றால், நாங்கள் பொழுது போக்குக்காகவா மீன்பிடிக்கின்றோம் என்று தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் பதிலடி கொடுத்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
"தங்களுடைய மீனவர்கள் வாழ்வாதார நோக்கத்துக்காகவே எங்களுடைய கடல் எல்லைக்குள் வந்ததாகவும், அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார். ஏறக்குறைய 30 வருடங்களாக, இந்திய மீனவர்களைக் கைது செய்வதும் விடுவிப்பதும் தொடர்கதையாகக் காணப்படுகின்றது.
அவர்கள் வாழ்வாதாரத்துக்காகக் கடலுக்குச் செல்கின்றார்கள் என்றால், நாங்கள் பொழுதுபோக்குக்காகச் செல்லவில்லை. நாங்களும் வாழ்வாதாரத்துக்காகவே கடலுக்குச் செல்கின்றோம். எனவே, எமது பக்கமுள்ள வலியையும், நியாயத்தையும் புரிந்துகொள்ளவேண்டும். எமது மீனவர்களின் பொருளாதாரத்தையும், வாழ்வுரிமையையும் தமிழக முதல்வர் உள்ளிட்ட தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும்.
தமிழகத்தின் கடற்பகுதியில் பாகிஸ்தான் மீனவர்களோ அல்லது சீனமீனவர்களோ வந்து மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கு தமிழக முதலமைச்சர் தயாராக உள்ளாரா? என்று நாம் கேட்க விரும்புகின்றோம். எங்களது வளங்களைச் சுரண்டிக்கொண்டு, வாழ்வாதாரம் மனிதாபிமானம் என்று பொய்களைக் கூறிக்கொண்டு எங்களது மக்களை நிர்க்கதியாக்கவேண்டாம்" - என்றனர். (அ-ம-27)

## மதுபானங்களின்...

சிகரெட் மற்றும் மதுபானங்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
நான்கு வகையான சிகரெட்டுகளின் விலை 5 மற்றும் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கப்ஸ்டன் மற்றும் ஜோன் பிளேயர் சிகரெட்டுகளின் விலை 5 ரூபாவாலும், டன்ஹில் மற்றும் கோல்ட் லீவ் சிகரெட்டுகளின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
மதுபானங்களின் விலைகளை 6 சதவீதத்தால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 6 சதவீத மதுபானங்களுக்கு விதிக்கப்படும் வரிகள் நேற்று முதல் திருத்தப்பட்டுள்ளன. வரித் திருத்தங்களுக்கு அமைய 3 ஆயிரத்து 580 ரூபாவாக இருந்த ஒரு போத்தல் அதிவிசேட சாராயத்தின் விலை 102 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 850 ரூபாவாக இருந்த ஒரு போத்தல் தென்னஞ் சாராயத்தின் விலை 109 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
இதற்கிடையில், செறிவு குறைந்த பீயர் போத்தல் ஒன்றின் விலை 30 ரூபாவாலும், செறிவு கூடிய பீயர் போத்தல் ஒன்றின் விலை 40 ரூபாவாலும் அதிகரித்துள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டு விஸ்கி போத்தல் ஒன்றின் விலையும் 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு வெளிநாட்டு மதுபானங்களின் விலைகள் அவற்றின் செறிவின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## ரூ.4,500...

அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச நாணயநிதியமே இன்று நாட்டை நிர்வகிக்கிறது. 4 ஆயிரத்து 500 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை இந்த ஆண்டு திரட்டிக் கொள்ளுமாறு சர்வதேச நாணயநிதியம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. இந்த வருவாயை வரிகள் ஊடாக திரட்டிக்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகள் மீது வரிகளை விதித்தே 4 ஆயிரத்து 500 பில்லியன் ரூபா வருவாயைத் திரட்டிக் கொள்ளமுடியும். இதுவே உண்மை.
நாட்டின் நிதி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையைக் குறிப்பிடாமல் இருந்தால் கோத்தாபயவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியே இந்த அரசாங்கத்துக்கும் ஏற்படும். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திடம் நடைமுறைச் சாத்தியமான கொள்கைத் திட்டங்கள் எதுவும் இல்லை. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தனியார் மயப்படுத்தலாக அமையாது. அரச நிறுவனத்தின் உரிமத்தை அரசு தனதாக்கிக் கொண்டு ஏனைய பங்குகளைத் தனியார் தரப்பினருக்கு வழங்கவேண்டும்.
மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சாரசபை முன்வைத்த முன்மொழிவுகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு புறக்கணித்துள்ளது.
மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் எதிர்வரும் 17ஆம் திகதி தமது நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இலங்கை மின்சாரசபை நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது என்று குறிப்பிடுகின்றனர். கடந்த காலங்களில் மின்சாரசபை இலாபமடைந்துள்ளது. ஆகவே அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவேண்டும். மின்கட்டணத்தை உடனடியாகக் குறைக்கவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## மயங்கி...

ரவீந்திரன் சுதாகர் (வயது-42) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த 6ஆம் திகதி மயங்கி வீழ்ந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்தநிலையிலேயே சிகிச்சையின்போது அவர் நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரியான வின்சன் அன்ரெலா மேற்கொண்டார். (அ-ம-26)

**காணி விற்பனைக்குண்டு**
திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200m தூரத்தில் 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
077 166 3859, 076 772 0059
(CS 2364) V-1

**வாடகைக்குண்டு**
கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி, செம்பாட்டு ஒழுங்கையில் 4 அறைகளும் இணைந்த 4 குளியல் அறைகளும் கொண்ட வீடு ரூபா 50000/= மாதாந்த வாடகைப் பெறுமதிக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 166 3859, 076 772 0059

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் முன் வீதியில் 34 பரப்புக்காணி விற்பனைக்குண்டு
- ஆனந்தகானம் வீதி முகப்புடன்
- பலாலி வீதியிலிருந்து 1Km தூரம்
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஊரெழு கணேசா வித்தியாலயம் 1Km தூரம்
- செம்மண், நன்னீருற்று, நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- 1 பரப்பின் விலை பதினைந்து லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (1,550,000)
- பார்வையிடும் நேரம் காலை 08.00 முதல் மாலை 06.00 வரை

076 069 1105
076 298 1105
077 468 3354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கலாசாலை வீதி, திருநெல்வேலியில்
அஉ [illegible]ள்ள 2 A/C உடன் 3 அறைகள்,
வரவேற்பு அறை, சமையலறையுடன்
அமைந்த புத்தம் புதிய ஆடம்பர வீடு மாத
வாடகைக்குண்டு.

077 983 6719, 077 517 7183

## ஓய்வூதிய...

அத்துடன், 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளுக்கு ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)



## மணமகள் தேவை

நவாலி CACM திருச்சபையை சார்ந்த B.Sc பட்டதாரி யாழ் நகரின் பிரபல இலத்திரனியல் வர்த்தக நிலை இயக்குநருமான 30 வயதான மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(CS/57182) V-1

தொடர்பு: 021 225 5290

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்
(காரைநகரில் பிறந்தவர்) 17.03.1985 இல்
பிறந்த திருவோண நட்சத்திரம் 8 செவ்வாய்
பிரான்ஸ் பிரஜாவுரிமை (அரச வேலை).
France மற்றும் Europe இல் இருக்கின்ற
மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
France மற்றும் Europe இல்
இருக்கின்றவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(CS/2261) J-1

T.P & Whatsapp - 077 610 5771

## மரண அறிவித்தல்

### மனோகரன் ஞானாம்பாள்



மலர்வு 04.07.1944 — உதிர்வு 04.01.2025

யாழ்ப்பாணம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், இல. 849 சிவிக்சென்டர் வட்டக்கச்சி, கிளிநொச்சியை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான மனோகரன் ஞானாம்பாள் அவர்கள் கடந்த 04.01.2025 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மனோகரன் (கிராம சேவை அலுவலர்) அவர்களின் அன்பு மனைவியும், பிருந்தினி (வைத்தியர்), அமிர்தகிரணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபினி (லண்டன்) அவர்களின் அன்பு மாமியும், காலஞ்சென்ற அருளம்பலம் (விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் - கிளிநொச்சி) மற்றும் திலகவதி (வட்டக்கச்சி), புவனேஸ்வரி (உருத்திரபுரம்), காலஞ்சென்ற ஏகாம்பரம் (உருத்திரபுரம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் இந்துமதி (கனடா), ஞானேஸ்வரி (ஏழாலை), காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன், ஜோகராசா ஆகியோரின் மைத்துனியும், உதயகுமாரன் (விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் - கிளிநொச்சி), காலஞ்சென்ற இளவெயினி மற்றும் ஜெனார்த்தனர் (கமநல சேவை நிலையம் - நெல்லியடி), இளங்குமரன் (வட்டக்கச்சி), ஜெவேந்தி (லண்டன்), மாங்களகுமாரன் (லண்டன்), இளவேந்தி (அதிபர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30am - 1.30pm (UK Time) Barnet multicultural community centre, Algernon Road, Hendon, London, Nw4 3TA, Rituals என்னும் இடத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 - 2.45 மணியளவில் Hendon Crematorium, Holders Hill Road, Mill Hill, London, NW7 1NB என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அமிர்தகிரணன் - +44 744 686 7787, +44 787 814 5746
மாங்களகுமாரன் - +44 748 218 5309, ஜெவேந்தி - +44 758 807 5989,
இளங்குமரன் - 076 534 3476, பிருந்தினி - +44 738 308 4721

தகவல் : குடும்பத்தினர்

(CS/28922) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து 1982 ல் பிறந்த பூராட நட்சத்திரம் விளம்பர நிறுவனம் நடாத்தும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 638 6326

## 60 கிராம்...

ஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 60 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்தின் பின்னர் மீட்கப்பட்ட பெருந்தொகை ஹெரோய்னாக இது கருதப்படுகின்றது. சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரிக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-ம-26)



## உடனடி வேலை வாய்ப்புகள்

யாழ்நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு
**City Tex - Nallur**
அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் - 35000 + Bonos, வயது - 18 - 25 வரை.
வேலை நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை.
மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்.

(CS/57188) J-1

021 221 6185, 077 293 5537

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில்
ஊர்க்கோழி
விற்பனைக்கு உண்டு.
(முட்டைக்கோழி)

(CS/57181) (N-1)

077 616 2014

## வீட்டு வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டு வேலையாள் தேவை. அனுபவமுள்ள பெண்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.
40 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

075 880 7718

## காணி விற்பனைக்கு

இணுவில் Hospital க்கு முன்பாக காங்கேசன்துறை வீதியில் 12 அடி பாதையை முகப்பாகக்கொண்ட 1.50 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு. மொத்தவிலை 180 இலட்சம்.

(CS/29075) N-1

தொடர்பு:- 077 313 8474

## Personal Classes

**English - Grade 6 - 11**
வரையான வகுப்புகளுக்கு
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:

(CS/57180) J-1

S.V. Ananth BA - 077 911 5962

## தேவை

பிரபல பெண் சட்டத்தரணிக்கு பெண் லிகிதர் கணினி அறிவு, ஆங்கில அறிவு உள்ளவர் தேவை.
யாழ். மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

077 730 4013

## விற்பனையாளர்கள் தேவை

யாழில் இயங்கி வரும் இலத்திரனியல் ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை.
வயது எல்லை - 21 - 45
கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/57140) J-1

அழைப்பு எண்:- 076 324 1761

## Lorry சாரதி தேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு
ஓடக்கூடிய சாரதி தேவை
**Garudan (Pvt) LTD**

(CS/57179) N-1

077 888 7051, 077 929 5909

## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)

(CS/56903) J-1

தொடர்புக்கு:- 077 614 6434

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-

(CS/56843) J-1

Whats app:- +61 421 290 240

## வாடகைக்குத்தேவை

யாழ்நகரம், நல்லூர், பழைய பூங்கா கச்சேரி, சுண்டுக்குளி ஆகிய இடங்களில் பழைய வீடு ஒரு வருடத்திற்கு வாடகைக்குத் தேவை. மின்சாரம், தண்ணீர் வசதி இருத்தல் வேண்டும்.
(நாற்சார் வீடு விரும்பத்தக்கது)

(CS/57165) (N-1)

074 254 3139

## கட்டுமான வடிவமைப்பு அலுவலகத்திற்கு பின்வரும் இடங்களுக்கு பெண் வேலையாட்கள் தேவை

03D designer and draughtsman, Quantity surveyor (QS)
பெண்கள் தேவை.

077 222 5531



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | மார்கழி 28 | ஞாயிற்றுக்கிழமை (12.01.2025) | சிகரம் :235

இழைத்தநாள் எல்லை இகவா; பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை; ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர், வழங்குமின் நாளைத்
தழீஇம்தழீஇம் தண்ணம் படும்.

— நாலடியார்



# 'கிளீன் சிறீலங்கா': எங்கிருந்து தொடங்க வேண்டும்?

○ நிலாந்தன்

சிறீலங்காவை கிளீன் பண்ணத்தான் வேண்டும். ஆனால் அதை எங்கிருந்து தொடங்குவது? சிறீலங்காவின் கறை எது? அல்லது அசுத்தம் எது? என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அங்கிருந்துதான் சுத்தப்படுத்தலைத் தொடங்கலாம். சிறீலங்காவின் அசுத்தம் எது?

இனப்பிரச்சினைதான். இன மோதல்கள்தான் சிறீலங்காவை உலக அரங்கில் அவமானப்படுத்தின. இனப்பிரச்சினைதான் சிறீலங்காவை ஜெனிவாவில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது. இனப்பிரச்சினைதான் தமிழ் மக்களை கூடு கலைந்த பறவைகள் ஆக்கியது. இனப்பிரச்சினைதான் சிறீலங்காவுக்குள் வெளிச்சக்திகள் தலையிடும் வாய்ப்பை வழங்கியது. இனப்பிரச்சினைதான் நாட்டைப் பொருளாதார ரீதியாக நாசமாக்கியது. கடன் வாங்கிச் சண்டை செய்தார்கள். கடனுக்கு வெடிமருந்து வாங்கி தமது சக இனத்தவர்களைக் கொன்றார்கள். காசைக் கரியாக்கினார்கள். விளைவாக நாடு அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது. எந்த நாட்டை சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்தார்களோ, அந்த நாட்டிலிருந்து இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் மட்டும் மொத்தம் மூன்று லட்சத்துக்கும் அதிகமானவர்கள் வெளியேறியிருக்கிறார்கள்.

முன்பு யுத்த காலங்களில் தமிழர்கள் வெளியேறினார்கள். காரணம் உயிர்ப் பயம். இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறுகிறார்கள். இப்பொழுது வெளியேறும் அதிகமானோர் படித்தவர்கள், துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள். பெரிய பொறுப்புகளில் இருந்தவர்கள். நடுத்தர வயதுக்காரர்கள்... ஏன் வெளியேறுகிறார்கள்? யாருக்காக நாட்டை வென்று கொடுத்தார்களோ, அவர்களே வெளியேறுகிறார்கள். என்றால் அந்த வெற்றியின் பொருள் என்ன? வென்றெடுத்த நாடு யாருக்குச் சொந்தம்?

சிறிலங்கா இப்பொழுது பேரரசுகளுக்குச் சொந்தமாகி வருகிறது. எல்லாப் பேரரசுகளின் இழு விசைகளுக்குள்ளும் நாடு சிக்கி விட்டது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக அது கடன் வாங்கிய நாடுகள் மற்றும் உலகப் பொது நிதி நிறுவனங்களின் பிடிக்குள்ளும் வந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் அரசாங்கம் நிலையான வைப்புக்களுக்கான வட்டிக்கு விதிக்கப்படும் வரியை உயர்த்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க அந்த வரியை ஐந்து விகிதமாக உயர்த்தினார். அநுர அதனை பத்து விகிதமாக உயர்த்தியிருக்கிறார். அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதாக விமர்சிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் இருபது லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்தார்கள். அதேசமயம் மூன்று லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

போர் காரணமாக தமிழர்கள் எப்பொழுதோ புலம்பெயரத் தொடங்கி விட்டார்கள். பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், மீண்டும் தமிழ்ப் புலம்பெயர்ச்சி அதிகரித்திருக்கிறது. இது மூன்றாவது தமிழ்ப் புலப்பெயர்ச்சி அலை. இந்த அலை முன்னைய இரண்டு புலப் பெயர்ச்சி அலைகளில் இருந்தும் துலக்கமான விதங்களில் வேறுபடுகிறது. முதலாவது புலப்பெயர்ச்சி அலையானது 1983 ஜூலைக்கு முந்தியது. அதில் ஆங்கிலம் பேசும், படித்த, பெருமளவுக்கு உயர் குழாத்துத் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்கள் சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தது குறைவு. இரண்டாவது அலை 1983 க்குப் பின்னரானது. அதில் லட்சக்கணக்கானவர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்களில் அதிகமானவர்கள் சட்ட விரோதமாகப் புலம் பெயர்ந்தார்கள். சட்டவிரோத வழிகளின் ஊடாகப் புகலிடந் தேடிச் சென்றவர்கள்.

**நாட்டின் உண்மையான கறை அப்படியே இருக்கத்தக்கதாக அதன் விளைவாக வந்த கறைகளை அகற்றுவது என்பது வலி நிவாரணி அரசியல்தான். எனவே நாட்டைச் சுத்தப்படுத்துவது என்றால் இனப்பிரச்சினை என்ற கறையை அகற்ற வேண்டும்.**

இப்பொழுது நிகழும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையும் ஒப்பீட்டளவில் சட்ட ரீதியானது. ஏனென்றால் ஏற்கனவே புலம் பெயர்ந்தவர்கள் அந்தந்த நாடுகளில் 'செற்றில்ட்' ஆகிவிட்டார்கள். அவர்கள் ஊரில் உள்ள தங்கள் உறவுகளுக்கு `ஸ்பொன்சர்` செய்யக்கூடிய அல்லது விசா வாங்கிக் கொடுக்கக்கூடிய தகைமையை அடைந்து விட்டார்கள். இது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் ஒரு பிரதான வேறுபாடு. அடுத்தது, இப்பொழுது புலம்பெயரும் தமிழர்களில் அநேகர் படித்தவர்கள். நடுத்தர வயதினரும் உண்டு. இங்கு பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள், அரசு ஊழியர்கள், சமூகத்தின் துறைசார் தலைமைத்துவம் என்று வர்ணிக்கத்தக்கவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் ஒரு பகுதியினர் திரும்பி வருகிறார்கள். தாயகத்தில் தமது பதவி நிலை காரணமாக அனுபவித்த அதேயளவு மரியாதை புலம் பெயர்ந்த நாட்டிலும் கிடைக்காதபோது விரக்தியடைகிறார்கள். குறிப்பாக நடுத்தர வயது கடந்தவர்கள் புலம் பெயர்ந்த நாட்டின் நிலைமைகளோடு தங்களைச் சுதாகரிக்க முடியாதபோது திரும்பி வருகிறார்கள். இதுவும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் பிரதான வேறுபாடுகளில் ஒன்று.

அண்மையில், ஐரோப்பாவில் வசிக்கும் ஒரு பிரபல எழுத்தாளர் என்னைக் காண்பதற்கு வந்திருந்தார். அவரோடு ஓர் இளம் அரச ஊழியரும் வந்திருந்தார். அந்த அரச ஊழியர் சொன்னார், தான் புலம் பெயரப் போவதாக. ஏனென்று கேட்டேன். "ஒரு அரசு ஊழியனாக என்னால் தாக்குப் பிடிக்க முடியாதுள்ளது. ஒரு புதிய வீட்டைக் கட்டினேன். மூன்று மில்லியன்களுக்கும் மேல் கடன். அந்த கடனை அடைப்பதற்காக என்னுடைய சம்பளத்திலிருந்து பெரும் தொகுதி போகிறது. ஜீவனோபாயத்துக்காக அப்பாவும் அம்மாவும் வீட்டில் ஒரு கடை திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த கடையைத் திறப்பதற்கான முதலீட்டில் ஒரு பகுதியையும் புலம் பெயர்ந்த நண்பர்கள்தான் தந்தார்கள். புலம்பெயர்ந்த தமிழர்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் என்னுடைய கடன் ஒரு சிறிய தொகை. ஆனால் அரச ஊழியனாகிய எனக்கோ அது பெரிய தொகை. எனவே கடனாளியாக இருப்பதை விடவும் புலம்பெயரலாம் என்று முடிவெடுத்தேன்" என்று சொன்னார்.

அவரோடு வந்த எழுத்தாளர் சொன்னார் "அவர் சொல்வது உண்மை. ஏனென்றால் என்னுடைய கிராமத்துக்கு அண்மையில் ஒரு செத்த வீட்டுக்குப் போயிருந்தேன். என்னுடைய வயதில் உள்ளவர்கள் அங்கே வந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் தோற்றத்தில் கிழண்டிப்போய்க் காணப்பட்டார்கள். அவர்களுடைய வயதைவிட அதிகம் முதுமையான தோற்றம். ஏனென்றால் வாழ்க்கை அந்தளவுக்குக் கஷ்டமாக இருக்கிறது; சுமையாக இருக்கிறது" என்று.

இவ்வாறு மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் கீழ் எத்தனை தமிழர்கள் புலம் பெயர்ந்து விட்டார்கள் என்பது தொடர்பாக சரியான புள்ளி விபரம் யாரிடமாவது உண்டா? இப்படியாக போரில் வென்றவர்களும் புலம் பெயர்கிறார்கள்; தோற்றவர்களும் புலம் பெயர்கிறார்கள். இப்பொழுது வெற்றிக்கும் பொருள் இல்லை. தோல்விக்கும் பொருள் இல்லை.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தால் தப்பிய கைதி!



○ கே.வி.தவராசா

### குற்றச்சாட்டுகள்

தியாகராஜா மோகனரூபன் அல்லது சுப்பிரமணியம் சிவதாசன் அல்லது முரளி என அழைக்கப்படும் இந்தக் கைதி, சொற்களின் மூலம் அல்லது சைகைகள் மூலம் அல்லது கட்புலனாகும் காட்சிகள் மூலம் அல்லது வேறு வகையான முறையொன்றினூடாக கொழும்பில் வன்செயல்கள் இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்வதற்காக எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தில் சேர்ந்துள்ளார். அதன் உளவுப் பிரிவில் உறுப்பினராகச் செயற்பட்டு குறித்த இயக்கத்தின் ஓர் உறுப்பினரான அகிலன் மற்றும் இலங்கைப் பொலிஸ் புலனாய்வுத் திணைக்களத்தில் சேவையாற்றிய தர்மதாச என்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரால் வழங்கப்பட்ட இலங்கைப் பொலிஸார் வசமிருந்த இரகசிய எழுத்தாவணங்களை டிஜிற்றல் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி பெற்றுக்கொண்டுள்ளார். பின்னர் அவற்றை எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்குக் கொடுத்துதவினார். அத்தோடு படையினரின் 10 சீருடைகளை எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் உளவுத் தகவல் பிரிவின் பொறுப்பாளரான கபிலம்மான் என்பவருக்குப் பெற்றுக்கொடுத்ததுடன் முன்னாள் கடற்படைத் தளபதி தயா சந்திரகிரியை தற்கொலைக் குண்டுதாரி மூலம் படுகொலை புரியவும் சதி செய்துள்ளார். எனவே 1988ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க மற்றும் 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 2(1)(ஏ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(2) (11) பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்பட வேண்டிய குற்றத்தை இவர் புரிந்துள்ளார்.'

இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைத்து , வெலிக்கடைச் சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தியாகராஜா மோகனரூபனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2009.10.26 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

### அரச சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் மனுத்தாக்கல்

மேல் நீதிமன்றில் விளக்கத்துக்காகப் பலமுறை திகதி குறிப்பிடப்பட்டு விளக்கத்துக்காக அரச சாட்சியாளர்களுக்கு அழைப்பாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் அரச சட்டத்தரணி மேல் நீதிமன்றில் 29.02.2012 ஆம் திகதி நகர்த்தல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த முன்நகர்த்தல் பத்திரம், பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாரின் வேண்டுகோளையடுத்து பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எதிராளியான தியாகராஜா மோகனரூபனை, விளக்கமறியல் கட்டுப்பாட்டிலிருந்து மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாரிடம் பாரம் கொடுக்கும்படி பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பிரதியை இணைத்துத் தாக்கல் செய்யப்பட்டது.




### அவசரகால ஒழுங்குவிதிகள் துஷ்பிரயோகம்

"அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் கைதுசெய்யப்படும் கைதிகளை 19(1)ஆம் 21(2)பிரிவுகளின் கீழ் பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவின்கீழ் 90 நாள்கள் காலத்துக்குத் தடுத்துவைத்து விசாரணை செய்யமுடியுமெனினும் 90 நாள்கள் முடிவடைய முன்னர் (Mandatorily) குறிப்பிட்ட கைதிக்கு எதிராக எந்தவித சான்றுகளும் இல்லாதவிடத்து தடுப்புக்காவலுக்கு பொறுப்பாகக் கடமை புரியும் அதிகாரியினால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நியாயாதிக்கம் உள்ள நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி சிறைச்சாலை பிசுக்காலின் கட்டுப்பாட்டுக்கு அந்தக் கைதி ஒப்படைக்கப்படவேண்டும்" என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 90 நாள்கள் முடிவடைந்த நிலையிலும் மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சிறைச்சாலையில் பிசுக்காலின் கட்டுக்காப்புக்கு அரசியல்கைதிகளைச் சட்டரீதியாக மாற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை பொலிஸார் கடைப்பிடிக்காமல் நீண்டகாலமாக வருடக்கணக்காகத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்தே விசாரணைகளை நடத்திவந்தனர்.

(வழக்கு தொடரும்)

# சிக்கலுக்குள் சீமான்

○ மயூ

பெரியார் என அழைக்கப்படும் ஈ.வே.ராமசாமி தொடர்பாகத் தெரிவித்த கருத்தையடுத்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கடும் விமர்சனங்கயைச் சந்தித்து வருகின்றார். ஆனால் சீமான் "எனக்குப் பெரியார் வேண்டாம், இனித் திராவிடத்தை ஒழிப்பதுதான் வேலை" என்று தனது முடிவில் எந்த விட்டுக்கொடுப்பும் இல்லாது இருப்பதால் இந்தச் சர்ச்சை வளர்ந்து பூதாகரமாகியிருக்கின்றது.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் சில தினங்களுக்கு முன்னர் கடலூரில் செய்தியாளர்களுக்குத் தெரிவித்த கருத்துகளே சர்ச்சையாக மாறியுள்ளன. சீமானுக்கு எதிராக ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரே அதிக எதிர்வினையாற்றிவருகின்றனர். பெரியாரைப் பற்றி சீமான் பொய்யான தகவல்களை சமூகங்களுக்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் வெளியிட்டுள்ளார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த விடயத்தில் கடந்த சில நாள்களில் சீமானுக்கு எதிராக தமிழகம் முழுவதும் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் சுமார் 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த சீமான், பெரியார் தமிழ் மொழியை அவமதிக்கும் வகையில் பல கருத்துகளைப் பதிவு செய்திருக்கின்றார் என்று சுட்டிக்காட்டினார். பெரியார் தமிழ் மொழியை இப்படிப் பேசிவிட்டுப் பிறகு தன்னுடைய கருத்தியலை இதே மொழியில்தான் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளார் என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்தார். அதேநேரம் பெண்களை அவமதிக்கும் வகையிலும் பெரியார் கருத்துகளை வெளியிட்டிருந்தார் என்றும் சீமான் குற்றஞ்சாட்டியிருந்தார்.

தற்போது தமிழகத்தில் இந்த விடயமே பெரும் பேசுபொருளாகியிருக்கின்றது. தமது அரசியலுக்கு அச்சுறுத்தலாக உள்ள நாம் தமிழர் கட்சியை, இந்த விடயத்தை வைத்து உடைப்பதற்கு ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சிக்கின்றது என்றே தெரிகின்றது. தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சிகள் இந்தவிடயத்தைக் கையிலெடுத்து சீமானுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிக்கின்றன. அவையும் இந்த விடயத்தின் மூலம் மக்கள் செல்வாக்கை அதிகரிக்க முடியுமா என்ற முயற்சியிலேயே இறங்கியிருக்கின்றன என்றே தமிழகத்தின் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஆனால் பெரியார் பற்றி தான் தெரிவித்த கருத்துகளில் இருந்து சீமான் பின்வாங்குவதாகத் தெரியவில்லை. 'பெரியாரே எனக்கு வேண்டாம், திராவிடம் பேசுபவர்களை ஒழிப்பதுதான் எனது முதல் வேலை' என்று விடாப்பிடியாக இருக்கின்றார் சீமான்.

புதுச்சேரியில் இந்தவிடயம் தொடர்பாக ஊடகங்கள் 'பெண்களை அவமதிக்கும் வகையில் பெரியார் பேசினார் என்று கூறியதற்கான ஆதாரத்தை தாருங்கள்' என்று கேட்டபோது, " மற்ற தலைவர்கள் எழுதிய புத்தகங்களை அரசாங்கம் நாட்டுடமை ஆக்கியது போன்று பெரியாரின் புத்தகத்தை நாட்டுடமையாக்குங்கள். அதில் உள்ளன ஆதாரங்கள் "என்று பதிலளித்துள்ளார் சீமான். 'முன்பு பெரியாரை தன்னுடைய தாத்தா என்று கூறியது ஏன்?' என்று ஊடகங்கள் கேட்ட போது, "முன்பு பெரியார் பற்றிய தெளிவில்லாமல் அவருக்கு ஆதரவு தெரிவித்தேன். தற்போது தொடர்ச்சியாகப் படித்து வரும்போது எனக்கு அந்தத் தெளிவு கிடைத்துள்ளது" என்று கூறியுள்ளார் சீமான்.

இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த திராவிடர் கழகத் தரப்புக்கள், சீமானின் கருத்துக் குறித்து அதிகம் விவாதிக்க ஒன்றும் இல்லை. அவரின் பேச்சுகளுக்கு எதிராக முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. அவர் சட்டரீதியாக இந்த வழக்குகளை எதிர்கொள்ளட்டும் என்று கூறுகின்றனர். ஆக இந்த விவகாரம் இலகுவில் ஓய்ந்துவிடப் போவதில்லை. தமிழ் நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பின்தள்ளி அடுத்த அரசியல் சக்தியாக வளர்ந்துவரும் நாம் தமிழர் கட்சி எதிர்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு பிரதான அரசியல் எதிரியாக இருக்கும் என்பது வெளிப்படையானது. அதனால் அப்போது அதிகாரத்தில் இருக்கும் தி.மு.க. அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு அனுகூலமாக்கவே முயற்சிக்கும். அதனால் சீமான் கடும் சட்டச் சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பது திண்ணம்.

### பெரியார்

பெரியார் என்று அழைக்கப்படும் ஈ. வெ. இராமசாமி, தமிழகத்தின் சமூக ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, மூட நம்பிக்கை, பார்ப்பனிய ஆதிக்கம் என்பவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர். இவர் சமூகத்துக்காகச் செய்த புரட்சிகரமான செயல்கள், தமிழ்நாட்டில் மண்டிக் கிடந்த சாதிய வேறுபாடுகளைக் குறிப்பிடத்தக்க வகையில் அகற்றியது என்றும் கூறப்படுகின்றது. தமிழக அரசு இவரது பிறந்தநாளை சமூக நீதி நாளாக அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எப்பவோ முடிந்த காரியம்!

# புங்குடுதீவுக்குப் போய்வந்த கதை



இளங்கோ ஏரம்பமூர்த்தி
(சித்த ஆயுள்வேத இயற்கை வைத்தியர், சுவிஸ்)

“அண்ணா இஞ்ச உங்கட சுவிஸ் மாதிரி இல்லை, இஞ்ச மோட்டு ஓட்டம் ஓடுவாங்கள் கவனம்!”என புறப்படும்போது வழக்கமாக சொல்வதுபோல அன்றும் சொன்னாள். “இஞ்சை பார் புள்ளை! முப்பத்தைந்து வருசமா ஐரோப்பிய நாட்டிலை கார் ஓடுறன். சுவிஸிலை இருந்து கிழக்கை போலந்து 1500 கிலோமீற்றர், தெற்காலை ஸ்பெயின் 1600 கிலோமீற்றர், வடக்கை டென்மார்க் 1300 கிலோமீற்றர், நோர்வே, மேற்குப் பக்கம் ஹொலண்ட் 1200 கிலோமீற்றர், ஜேர்மனி, ஒஸ்ரியா, செக் குடியரசு, பிரான்ஸ் என ஐரோப்பிய நாடுகள் மட்டுமில்லை, போன வைகாசி மாதம் கனடாவிலேயே ஓடினான். இதென்ன சுண்டைக்காய் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்திலை ஓடுறதென்ன பெரிய சாதனையா?' என்று ரஜனி ஸ்டைலில் சொல்லத்தான் ஆசை. ஆனால் சொல்லவில்லை. புறப்படும்போது அவளுடன் புடுங்குப்பாடு ஏன்?

“சரி,சரி ஒண்டுக்கும் யோசிக்காதை, கவனமா ஓடுறன்” என்று வாய் சொன்னது.

ஆனால் உண்மையிலேயே யாழ்ப்பாணத்தில் வாகனம் ஓடுவது பெரிய சாதனைதான்.

சுவிஸ் நாட்டு லைசன்ஸை இலங்கையில் காட்டி அங்கு மெடிக்கல் எல்லாம் முடித்து இலங்கை லைசன்ஸ் மாற்றித் தந்துவிட்டார்கள். கார், மோட்டார் சைக்கிள் எல்லாம் ஓடலாம். ஆனால் மூன்று சக்கர ஓட்டோ மட்டும் ஓட முடியாது. ஆனால் ஓட்டோ ஓட்டுவது எனக்கு மிகவும் பிடிக்கும். எனவே சில வருடங்களுக்கு முன் தியறி படித்து “றயல்” காட்டி ஓட்டோ லைசன்ஸ்கூட எடுத்துவிட்டேன். ஓட்டோ லைசன்ஸ் எடுப்பதற்குத் தமிழில் தியறிப் புத்தகம் தந்தார்கள். சொன்னால் நம்பமாட்டீர்கள். சுவிஸ் நாட்டு அதே போக்குவரத்து விதிமுறைகள்தான் இலங்கையிலும் இருக்கின்றன.

ஆனால் இங்கு வாகனம் ஓடும்போது யாருக்கு ஒரு சந்தியில் முன்னுரிமை, யாரைமுன்னே விட்டு நாம் போகவேண்டும் என்பது எதுவுமே யாருக்கும் தெரியாது. யார் வேகமாக ஹோர்ண் அடித்துக்கொண்டு சுழித்துக்கொண்டு முன்னே போகிறாரோ அவருக்குத்தான் முன்னுரிமை. எட, பாதசாரிகள் கடக்க முற்படும்போது வாகனத்தை நிறுத்தி வீதியைக் கடக்கும் மனிதர்களுக்கு வழியை விட்டுக்கொண்டி ருக்கும்போது பலமாக ஹோர்ண் அடித்தபடியே சி.ரி.பி.பஸ் விலத்தி முந்திக்கொண்டு போகுதப்பா இந்த நாட்டிலை. எவ்வளவு ஆபத்துத் தெரியுமா? சரி, இங்கு வாகனம் ஓட்டுறதைப் பிறகு பார்ப்போம். இப்ப கதைக்கு வருவோம்.

யாழ்ப்பாணத்தில் ஒரு கடைக்குப் போக வேண்டியிருந்தது. அத்துடன் இரண்டு நண்பர்களையும் சந்திக்கவேண்டியிருந்தது. என்னுடைய மருமகள் வித்தகியின் வெகோ மோட்டார்சைக்கிளை இரவலாகக் கேட்டேன். அவள் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்வி நிலையத்தில் ஆங்கில ஆசிரியையாகப் பணிபுரிகின்றாள்.

“என்னைக் கொண்டுபோய் வேலை இடத்தில் விட்டிட்டு பைக்கை கொண்டு போங்கோ மாமா” என்றாள். இருவருமாக ஒரு எட்டரை போல புறப்பட்டோம். நான் பைக்கைச் செலுத்த மருமகள் பின்னே அமர்ந்திருந்தாள். ஓடும்போதே உயிரைக் கையில் பிடித்தபடி பயத்தோடு ஒரு ஆள் பின்னுக்கு இருக்கின்றது என்று எனக்கு விளங்கிவிட்டது.

உண்மையிலேயே இங்கு மக்கள் என்ன யோசனையில் வாகனத்தைச் செலுத்துகிறார்கள், அடுத்து என்ன செய்யப் போகிறார்கள் என்று ஊகிப்பதற்கும், எந்த இடத்தில் வாகனத்தை வேகமாக ஓடவேண்டும், எங்கு மெதுவாகச் செலுத்தவேண்டும் என்று முடிவெடுப்பதற்கும் ஒரு தனித்திறமை வேண்டும்.

அப்பாடா! என்று பெருமூச்சு விட்டாள் என் மருமகள். ஒரு அரைமணியில் அவளின் பாடசாலைக்கு வந்துவிட்டோம். “பன்னிரண்டே முக்காலுக்கு முடிந்துவிடும். என்னைக் கூட்ட வருவியள்தானே?” என்று கேட்டாள் மருமகள். “ஓமோம் வந்திடுவன் புள்ளை ” என்று சொன்னேன். “ஆனால் பைக்கை நான்தான் ஓடுவன் மாமா ” என்றாள். மருமகளின் மைன்ட்வாய்ஸ் மாமாவுக்குத் தெளிவாகவே கேட்டது. சிரித்தாள். “உலகம் முழுக்கக் கார் ஓடினதெண்டு புளுகித்தட்டுறியள். எங்க உதிலை மீசாலையில இருந்து யாழ்ப்பாணம் ஓடேக்கையே தெரியுது. என்னத்தை.......!”ஒன்றும் சொல்லவில்லை நினைத்திருப்பாள். அந்தச் சிரிப்புக்கு அதுதான் அர்த்தம்.

சந்திக்க வேண்டியவர்களிடம் போனேன். போன வேலைகள் உடனே முடிந்துவிட்டன. இப்ப மணி பத்து. பன்னிரண்டே முக்கால் மட்டும் என்ன செய்யலாம்? திடீரென்று ஒரு யோசனை. எனக்கு சுவிஸ் நாட்டில் மிகவும் நெருங்கிய புங்குடுதீவு நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். உலகெல்லாம் போய்வந்த நான்,புங்குடுதீவுக்கு இதுவரை போனதேயில்லை. நாலாம் வகுப்புப் படிக்கும்போது அப்பா அம்மாவுடன் நயினாதீவு போயிருக்கிறேன். போகும்போது அறியாத வயதில், தெரியாத பருவத்தில் அந்தவழியால் சிலவேளை போயிருப்பேன். கோடிக்கணக்கான ரூபா செலவில் ஊரார் எல்லாம் சேர்ந்து ஒரு அம்மன் கோவில் கட்டியிருக்கிறார்களாமே. உடனே ஜி.பி.எஸ். உதவியுடன் கணக்குப்போட்டுப் பார்த்தன். 28 கிலோமீற்றர் 42 நிமிடம் எனக்காட்டியது. சரி போக 45 நிமிடம், திரும்ப 45 நிமிடம், அங்க ஒரு மணிநேரம் போதுந்தானே. தெரிந்தவர்கள் யாரும் இங்கில்லைத்தான். ஆனால் அந்தப் கோவிலைப் போய்ப்பார்த்துக் கும்பிட்டு வரலாம்தானே. மனம் கணக்குப் போட்டது. ஏன் போகக் கூடாது, யாருக்குத் தெரியப்போகிறது? தெரிந்தால் திட்டுவார்கள். முன்பொருமுறை என் தங்கையும் மைத்துனரும் புங்குடுதீவு போய்வரும்போது ஒருவன் பைக்கில்ல வந்து “இது ஆற்றை ஏரியா தெரியுமோ?” என்று மிரட்டியதாகச் சொன்னது ஞாபகத்துக்கு வந்துபோனது. பரவாயில்லை. முடிவெடுத்து விட்டேன்.




(பயணம் தொடரும் )



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

தனிச்சிங்களச் சட்டம் மீதான விவாதத்தின்போது சுந்தரலிங்கம் தனக்கு வழங்கப்பட்ட நேரத்தைத் தாண்டி உரையாற்றிக்கொண்டிருந்தார். சபாநாயகர் உரையை நிறுத்துமாறு கூறினார். சுந்தரலிங்கம் நிறுத்தாமல் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தார். சபாநாயகர் சுந்தரலிங்கத்தை நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார். சுந்தரலிங்கம் அசையாமல் தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். படைக்கல சேவிதர்களிடம் சுந்தரலிங்கத்தை வெளியேற்றுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார்.

13

படைக்கல சேவிதர்கள் பலத்த சிரமப்பட்டு சுந்தரலிங்கத்தைக் கதிரையுடன் தூக்கிவந்து நாடாளுமன்ற வாசலில் அமர்த்தினர். வீதியால் சென்ற சிலர் சுந்தரலிங்கத்தின் மீது கற்களை வீசிவிட்டுச் சென்றனர். நாடாளுமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டியது பொலிஸாரின் கடமை. அத்துடன் வாகனப்போக்குவரத்தும் தடைப்பட்டது. பொலிஸ்மா அதிபர் சிட்னி டீ சொய்சா வந்து கையைப் பிசைந்துகொண்டு Sir என்றார். பொலிஸ்மா அதிபர் சிட்னி டீ சொய்சா சுந்தரலிங்கத்தின் மாணவன். சுந்தரலிங்கம் “do your duty” என்றார். நின்ற பொலிஸ்காரர்கள் அனைவரும் சேர்ந்து சுந்தரலிங்கத்தைத் தூக்கி ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வெள்ளவத்தை பொலிஸ் நிலையம் சென்றனர். சிட்னி டீ சொய்சா சுந்தரலிங்கத்தின் மாணவன் என்பதால் சுந்தரலிங்கத்திற்கு வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் இராஜ உபசாரம் வழங்கப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோள வெப்பமடைதலைத் தடுப்பதில்

# COP 29 காலநிலை மகாநாட்டின் தோல்வி

கலாநிதி. எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2009 இல் தென்னாபிரிக்காவின் கொப்பனேகனில் இடம்பெற்ற காலநிலை மாற்றம் பற்றிய மாநாட்டில் வன்முறையுடன் கூடிய ஊர்வலங்கள் இடம்பெற்றன. பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னரே ஐக்கிய அமெரிக்கா பல தடைகளை ஏற்படுத்தியது. "நாட்டின் சக்தி வளம், போக்குவரத்து, தயாரிப்புத்துறைகள் என்பவற்றில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் உடன்படிக்கைக்கு இணங்க அமெரிக்க அரசியல் முறைமை ஆயத்தமாக இல்லை (டிசெம்பர் 13, 2009)" என நியுயோர்க் ரைம்ஸ் விளக்கிக் கூறியிருந்தது. ஒபாமா நிர்வாகமானது கியோட்டோ பின்னேட்டின் அடிப்படையில் பல விடயங்களைக் கட்டியெழுப்பாது புதிய அமைப்பொன்று தேவை என வற்புறுத்தியது. பச்சைவீட்டு வாயுக்களின் குறைப்பை மேற்கொள்ள ஒவ்வொரு நாடும் தமக்கென விதிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும் என ஒபாமா கூறினார். (The Guardian, September 15, 2009) விருத்தியடைந்த நாடுகள் வெளியேற்றங்களைக் குறைப்பதற்கான சட்டரீதியான கட்டுப்பாட்டுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ளவில்லை. உடன்படிக்கையில் 20C இலக்கும் ஏனைய பல முன்னேற்பாடுகளும் உள்ளடக்கப்படவில்லை. 2009 இல் கொப்பனேகன் மாநாட்டில் 20C என ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் 6 ஆண்டுகளின் பின் 2015 இல் பிரான்சில் 1.50C என இலக்கு வைக்கப்பட்டது.

2

எதிர்வரும் காலங்களில் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களையும், நிதியியல் தேவைகளையும் எதிர்கொள்வதில் இந்த மாநாடு தோல்விகண்டுள்ளது. இந்த மாநாட்டு முடிவுகள் காலநிலை நிதி மற்றும் கூட்டுப் பொறுப்பினைக் குறைத்து மதிப்பிட்டுள்ளது. சுவட்டு எரிபொருள், கைத்தொழில் மற்றும் உயர்வான மாசாக்க வெளியேற்றங்களைக் கொண்ட அரசுகளுக்குச் சர்வதேச காபன் சந்தைகளை முன்வைத்ததன் மூலம் மிகமோசமான புதிய ஓட்டைகளை உருவாக்கியுள்ளது. காலநிலை நிதி மிகக்குறைவு. ஆனால் தாமதித்துவிட்டது என்ற கருத்துகள் கூறப்பட்டாலும் உண்மையில் தேவையான நிதியை மேசையில் வைப்பதற்குப் பூகோள வடக்கு அரசாங்கங்கள் பக்கு மாநாட்டில் விரும்பவில்லை. வருடத்துக்கு 300 பில்லியன் டொலர் என்பது இறுதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டாலும் இந்த மிகக்குறைவான தொகையின் மூலமே பெரும்பாலான வறிய நாடுகள் தமது பொருளாதாரங்களை மாற்றவும் காலநிலை நெருக்கடியை மாற்றியமைக்கவும் இழப்புக்கள் மற்றும் சேதங்களுக்கான இழப்பீடுகளை வழங்கவும் வேண்டும்.

பாரிஸ் உடன்படிக்கையின் இலக்குகளைப் பூர்த்திசெய்வதற்கும் காலநிலை நெருக்கடி மேலும் தீவிரமடைவதைத் தடுப்பதற்கும் தேவையான மிகமுக்கியமான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் இந்தக் காலநிலை மாநாட்டில் (COP 29) இடம்பெற்றது. இந்த மாநாட்டின் பிரதான இலக்கு பூகோள வெப்பநிலை உயர்வை 1.5 பாகை செல்சியசாக மட்டுப்படுத்துவதாகும். இந்த இலக்கினை உடனடியாக நிலைமாற்றத்தின் நடவடிக்கை ஊடாக அடைந்துகொள்ளல் என்பதாக இருந்தது. COP 29 இல் வருடாந்தம் 300 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பூகோள காலநிலை நெருக்கடிகளைத் தணிப்பதற்கு 1.3 ரில்லியன் டொலர்கள் தேவைப்படும். காலநிலை பற்றிய நிதிப் பேச்சுவார்த்தைகளில் இரு முக்கியமான தூண்களாக இருந்த மாற்றியமைத்தல் முயற்சிகளுக்கான நிதி, இழப்பு மற்றும் சேதங்களுக்கான இழப்பீடு ஆகியவற்றுக்கான உப இலக்குகள் உடன்படிக்கையில் காணப்படவில்லை.

காலநிலை நெருக்கடியில் முன்னிலையில் இருந்த ஆக்டிக் மற்றும் சுதேசிய சமூகங்களுக்கு நிதியுதவி விரிவாக்கப்படவில்லை. பூகோளச் சராசரியை விட 34 மடங்கு அதிகமான வெப்பமடைதல் இடம்பெறும் பிரதேசங்களில் இச்சமூகங்கள் வாழ்கின்றன. கோடையில் கடல் பனிக்கட்டிகளின் இழப்பு, சமுத்திரம் அமிலமாக்கப்படல், பனியுருகல், கரையோர வெள்ளப்பெருக்குகள் என்பவற்றினால் பாதிக்கப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் காலநிலையினால் தூண்டப்படும் விரைவான மாற்றங்களைக் கண்ணூடாகவே கண்டுகொள்ளமுடிகின்றது. அதிகரித்துவரும் வெப்பமடைதல் காரணமாக கிறீன்லாந்து பனிப்படலம் மற்றும் ஆக்டிக் பனிப்பாறைகள் உருகுவதால் உலகம் பூராகவும் கடல் மட்டங்களில் எழுச்சி ஏற்படுகின்றது. இலகுவில் பாதிக்கப்படும் ஆக்டிக் சமூகங்களுக்கு இழப்பு மற்றும் சேதம் தொடர்பான இழப்பீடுகள் ஐக்கிய நாடுகளின் காலநிலை நிதிப் பொறிமுறையின் கீழ் தவிர்க்கப்பட்டுள்ளன. இப்பொறிமுறை நாட்டுக்கு நாடு என்ற அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. காலநிலைத் தணிப்பு மற்றும் மாற்றியமைத்தல் நிதியுதவிகள் விருத்தியடைந்த நாடுகளிலிருந்து, விருத்தியடைந்துவரும் நாடுகளுக்கே வழங்கப்படுகின்றன. இதனால் ஆக்டிக் சமூகங்கள் நிதியுதவியின்றிக் கைவிடப்பட்டுள்ளன.

(தொடரும்)



## வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு....

வணக்கம், உங்கட ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு நன்றி.

'கிளீன் ஶ்ரீலங்கா' வந்தாப்பிறகுதான் கட்டாக்காலி மாடுகளைப் பற்றி யோசிக்கிறியளோ தெரியேல்லை. நான் அந்த மாடுகளைக் 'கட்டாக்காவாலி' மாடுகள் எண்டுதான் சொல்லுவன். ஆனால் நல்ல விஷயம். கட்டாக்காவாலி மாடுகள் எண்டு ஏன் சொன்னனான் எண்டால், நான் சிறு பிள்ளையாக இருக்கேக்கை ஊரிலை தாய் தேப்பன்ரை சொல்லுக் கேக்காமல், ஒரு கட்டுக்கடங்காமல் குடிச்சு வெறிச்சுக்கொண்டு பொம்பிளையளுக்குச் சேட்டை விட்டுக்கொண்டு திரியிற இளசுகளைக் காவாலிகள் எண்டுதான் சொல்லுறவை. அதுமாதிரித்தான் இப்ப ரவுணுக்கை மாடுகள் திரியுதுகள். அதோடை அதுகள் மாதிரி இரண்டுகால் மாடுகளும் கனக்கத் திரியுதுகள். அதாலை சனம் ஒழுங்காப் போய்வரக் கஷ்டமாயிருக்குது. போனகிழமையும் சத்திரச் சந்தியிலை ஒரு மோட்டச்சைக்கிளிலை வந்த மனுசியை ஒரு கட்டாக்காலி மாடு குறுக்காலைபோய் இடிச்சுவிழுத்திப்போட்டுது. என்ன செய்யிறது? உடனை அங்க நிண்ட சனம் வந்து தூக்கி நிறுத்தினாலும் அந்த மனுசியின்ரை கை, கால் எல்லாம் தேச்சுப் படுகாயம். மனுசர் எண்டால் கத்திக் குளறி பொலிசைக் கூப்பிட்டு ஏதாச்சும் செய்யலாம். இது மாட்டை என்ன செய்யிறது? விழுந்த மோட்டர்சைக்கிள் முன்சில்லுக்குக் காத்துப் போட்டுது. தள்ளிக்கொண்டு ஒட்டுக் கடையைத் தேடிப்போனதுதான். போனாப்பிறகுதான் ஆரோ சொல்லுச்சினம் அவ ஒரு பள்ளிக்கூட ரீச்சர் எண்டு, பாவம்! அதைமாதிரி போனகிழமையும் மாடு குறுக்க பாய்ஞ்சு ஒரு பெடியன் வல்லைவெளிக்கு கிட்ட அநியாயமாச் செத்துப்போட்டான்.

நான் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போட்டுவரேக்கை அந்த மாடுகளைப் பாத்திட்டு யோசிக்கிறனான். வாகனங்களைப் பிடிக்கப் பொலிஸாருக்குச் சட்டம் இருக்கிறதைப் போலை மாட்டைப் பிடிக்கச் சட்டம் இல்லையோ எண்டு! மாநகரசபை நினைச்சால் அதைக் கட்டுப்படுத்தலாம். அவையும் அதை யோசிக்கேல்லையோ?

அந்த மாடுகளின்ர சொந்தக்காரர் நல்ல சட்ட ஆலோசனையை எடுத்துக் கொண்டுதான் மாடுகளை அவிட்டுவிடுகினம் போலை. சட்டத்துக்குள்ளை இருக்கிற ஓட்டை ஒண்டைப் பாவிச்சுத்தான் உந்த விளையாட்டு நடக்குது எண்டு கேள்வி.



அவசரமா ஒரு கடுதாசி

லட்சக் கணக்கில மாட்டை வாங்கிப்போட்டு அதை ஒழுங்கா வளர்க்கத் தெரியாத பிச்சைக்காரர் உவை. காலையிலை தீன் வைச்சுப் பாலைக் கறந்து குடிக்கிறது. இல்லாட்டிப் பாலைத் தேத்தண்ணிக் கடைக்கு விக்கிறது. வித்துப்போட்டு மாட்டை வெளியிலை போய் மேயட்டும் எண்டு கலைச்சு விட்டிடுவினம். யாழ்ப்பாண ரவுணுக்கை என்ன பசும்புல்லே கிடக்கு மாடுகள் மேய. அதுகள் என்ன செய்யும்? வெள்ளிக்கிழமைகளிலை சனம் பிச்சை எடுக்கிற மாதிரி கடை கடையாப்போய் பிச்சை எடுக்காத குறை. அப்பிடிச் சீவிக்கிறது அதுக்குப் பழக்கம். சிலநேரம் அது ஆக்களை, இடிக்கும். சிலநேரம் வாகனங்கள் மாடுகளை இடிக்கும். உது மிருகவதை இல்லையோ? உதை மிருகவதைச்சட்டம் கட்டுப்படுத்தாதோ? நான் நினைக்கிறன் அதுக்குரிய ஆட்கள் கண்டும் காணாமல் இருக்கினம். அதாலதான் உந்தப் பிரச்சினை. இது ஐஞ்சு அறிவுள்ள மாடுகளின்ர பிழை இல்லை. ஆறறிவுள்ள இரண்டு கால் மாடுகளின்ர பிழை எண்டுதான் நான் சொல்லுவன்.

அதாலை உங்கட நடவடிக்கையை நாங்கள் வரவேற்கிறம். அதுக்குப் பெரியதொரு தாங்ஸ். இதை உங்களுக்கு எழுதிக்கொண்டு இருக்கேக்கை பால்காரப் பரமசிவம் வந்தவர். அவருக்கு நீங்கள் சொல்லி இருக்கிற செய்தியைப் பற்றிச் சொன்னன். "நீயும் மாடுகளை வைச்சிருக்கிறாய்தானே? இப்பிடியே நீ மாடுகளை வளர்க்கிறாய்?"எண்டன். 'ஒருக்கால் வாசிச்சுக்காட்டு' எண்டு கேட்டார். பிலத்து வாசிச்சன்.

வடக்கு மாகாணத்தில் வீதிகளில் சுற்றித்திரியும் கட்டாக்காலிகளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு, அதனையும் பொருட்படுத்தாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் உள்ள வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டங்கள் அதிகமாகக் காணப்படுவதால் வீதி விபத்துகள் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகின்றது. இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு இன்றிலிருந்து ஒரு வாரத்துக்கு வட மாகாணம் முழுவதும் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு முதற்கட்ட நடவடிக்கையாக எச்சரிக்கை வழங்கப்படவுள்ளது. அவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டும் கருத்திற்கொள்ளாத கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.'

அவர், இந்தச் செய்தியைக் கேட்டிட்டு "அசல் வேலை, இப்பிடித்தான் இருக்கவேணும். உடனை அந்தச் சட்டத்தை அமுல்படுத்தவேணும் எண்டுஅவரைச் சந்திச்சுச் சொல்லவேணும்"எண்டு சொன்னார். நாங்களும் ஆடு, மாடு, கோழி எண்டு வளர்க்கிறம் தானே! ஆருக்கும் அதால இடைஞ்சலே? என்னத்தை வேணும் எண்டாலும் வளர்க்கலாம். மற்றவைக்கு அதாலை கரைச்சல் இருக்கப்படாது என்ன?

பொலிஸ் பெரியவருக்கு இன்னும் ஒரு வேண்டுகோள். அது இலங்கைப் போக்குவரத்துச்சபையின்ரை கடை வியாபாரம். அவையளை விட்டது மக்களுக்குச் சேவை செய்ய. அவையளை மக்களுக்குக் கரைச்சல் குடுத்து வியாபாரம் செய்யச் சொல்லேல்லை. அவை தங்கட சபையின்ர லாபத்தைக் கூடக்காட்ட பெரிய பஸ் ஸ்ராண்ட்டுக்கை கடையளைக் குடுத்து சனத்துக்குத் தேவை இல்லாத கரைச்சல். பழக்கடை, ரெலிபோன் கடை, மணிக்கடை, கடலைக் கடை, தேத்தண்ணிக் கடை எண்டு ஒரு ஒழுங்கில்லாமல் கடையளைக் குடுத்து பஸ்ராண்டைச் சீர்கெடுத்து வைச்சிருக்கினம். கடைகளிலை நிக்கிற இளசுகளின்ரை சேட்டையள் வேறை. போற வாறவைக்கு நக்கலும் நளினமும். அதோடை நிக்கிற பஸ்ஸில ஏறி பலவித வியாபாரமும் நடக்கிது. அதுவும் மினி பஸ்ஸுக்கை சனம் ஏறி நிண்டாப் பிறகு அதுக்கை இடிச்சு நுழைஞ்சுக்கொண்டு வியாபாரம். இதைப் போலை கன விளையாட்டு நடக்கிது. அதையும் கட்டுப்படுத்தவேணும். உதெல்லாத்தையும் நினைச்சால் தலை இடிக்கும். எண்டாலும் அதுகளையும் ஒருக்காப் பாத்து 'கிளீன்'பண்ணி விடுங்கோவன்.

நன்றி.

இப்படிக்கு
*அப்பாவி அன்னமுத்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளர்ப்தினம்

பாகம் 3

○ இராகவன்

இதில தபால்காரரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லோனும். சில தபால்காரருக்கினம், மணியடிச்சுத் தபாலைத் தந்திட்டுத் தங்கடபாட்டில போகிடுவினம். ஆனால் சில தபால்காரர் கொஞ்சம் வித்தியாசமாயிருப்பினம். அப்பிடியொராள்தான் சோதியண்ணை. அவருக்கு ஒரு நல்ல பழக்கமிருக்கு. ஒரு வீட்டுக்குக் கடிதம் குடுக்கப் போனால் மணியடிப்பார். கடிதம் வாங்க வாற ஆளோட இரண்டொரு வார்த்தை கதைச்சிட்டுத் தான் போவார். அவரின்ர முழுப்பெயர் சிவசோதி. மற்றது விடுதலைப்புலிகள் இயக்கத்தின்ர மிகத்தீவிர ஆதரவாளர். அது பரவலா எல்லாருக்கும் தெரியும். தட்டித்தவறி ஆராவது சோதியண்ணைக்கு முன்னால இயக்கத்தை குறைச்சுக் கதைச்சால் அவ்வளவுதான். சோதியண்ணை அந்தாளைப்பிடிச்சு விளக்கமளிக்க வெளிக்கிட்டார் எண்டால் அண்டைய பொழுது அதோட கழியும்.

உப்பிடித்தான் சோதியண்ணை. எங்கடை ஏரியாவுக்கு தபால்காரனாயிருக்கேக்குள்ள ஒரு நாள் எங்கட வீட்டுக்குத் தபால் கொண்டு வந்து மணியடிச்சார். இளையண்ணாதான் தபால் வாங்கப் போனவன். அவனுக்குச் சோதியண்ணையின்ர குணந் தெரியும். அந்தாளும் தபாலைக் குடுத்திட்டுப் பேசாமல் போயிருக்கலாம். ஏதோ புலிகள் இயக்கத்தைப் பற்றி விலாசமாக் கதைச்சிருக்குது. இளையண்ணாவுக்கும் வாய் சும்மா கிடக்கேல்ல "உந்த இயக்கம் பாக்கிறது முழுக்கப் பேய் வேலை தானே?" எண்டிருக்கிறான். சோதியண்ணை குழம்பிட்டார். சைக்கிளை ஸ்ராண்டில் விட்டுட்டு இறங்கினார். "தம்பி நீங்கள் சின்னப் பொடியள். உங்களுக்குப் புலிகள் இயக்கத்தைப் பற்றிய வரலாறு தெரிஞ்சிருக்காது. அதைத் தெரிஞ்சு கொண்டு தான் கதைக்க வேணும் சும்மா எடுத்த வாக்கில வாய்க்கு வந்தபடியெல்லாம் கதைக்கக் கூடாது. விளங்குதே?" எண்டு தொடங்கினார். இளையண்ணனும் விடேல்ல. "என்ன பெரிய வரலாறு? நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் உவங்கள் பாக்கிற வேலையெல்லாம் பேய் வேலைதான்." எண்டு மறுத்தான் குடுத்தான். இப்பிடியே கதைச்சுக் கதைச்சு இரண்டுபேரும் வீட்டுக்குள்ள வந்திட்டினம். அண்டைக்கெண்டு அப்பரும் வீட்டில நிண்டிட்டார்.பிறகென்ன விவாதம் களைகட்டத் தொடங்கிச்சுது. அப்பா சொன்னார் "உமாமகேஸ்வரன் ஒரு சேர்வையர். அவன்தான் இயக்கத்தின்ர மூளை. அவன் போடுற பிளானிலதான் எல்லாம் நடந்து கொண்டிருக்குது. அவன் இல்லையெண்டால் புலிகள் எண்டொரு இயக்கமே இல்லை." (அப்போது உமாமகேஸ்வரன் பிரபாகரனோடு இணைந்து தான் இயங்கிக்கொண்டிருந்தார்.) இப்ப சோதியண்ணை முழுசாக்குழம்பிட்டார். "என்னதான் பிளான் போட்டாலும் அதைச் செய்து முடிக்கிறது பிரபாகரன் தானே? அவன்தான் விண்ணன் அண்ணை" எண்டு சோதியண்ண தொடங்கினார்.

12

இப்பிடியே காலமை ஒன்பதரைக்குத் தொடங்கின டிஸ்கஷன் மத்தியானமாகியும் முடியேல்ல. எனக்கு வலுமுசுப்பாத்தியாயிருந்திச்சுது. சோதியண்ணை நிண்டு கதைக்கேலாமல் கடைசியில வாங்கில இருந்திட்டார் அப்பரும் இளையண்ணனும் சேர்ந்து நடத்தின இருமுனைத்தாக்குதலுக்கு அவரால ஈடு கொடுக்க முடியேல்ல. ஆள் கொஞ்சந் திணறித்தான் போனார். நல்லவேளை குசினிக்குள்ள சமைச்சுக் கொண்டிருந்த அம்மாதான் வெளியிலவந்து சோதியண்ணையைக் காப்பாற்றினா. "கதையை நிப்பாட்டுங்கோ! மத்தியானமாகி மதியந்திரும்புற நேரமாச்சு. தம்பி! உந்தக் கதையளப் பின்னேரக் கையாய் வந்து கதையப்பு! இப்ப தபாலுகளைக் கொண்டேக் குடுக்கிற வேலையைப்பார்" எண்டு சோதியண்ணைக்குச் சொன்னா. அப்பவும் எழும்ப மனமில்லாமல்தான் ஆள் எழும்பிப் போச்சுது.

(தொடரும்)

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை

(05.05.1934 - 20.04.2024)

18

# யாழ்ப்பாணம்: நாவலர் பிறந்த மண்!

○ பா.துவாரகன்

கடந்த சில வாரங்களாக சஞ்சீவி வார இதழில் ஆசிரியர் உமாமகேசுவரனது நினைவுகளை மீட்கும் கட்டுரைகள் வரவில்லையே என்று நண்பர்கள் சிலர் தொலைபேசி அழைப்பெடுத்து மிகுந்த ஆவலோடு கேட்டார்கள். உடல் நலக்குறைவு காரணமாக 5 நாள்கள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டி ஏற்பட்டது. கட்டுரைகள் எழுதாமைக்கு இதுவும் ஒரு காரணம்.

2008 ஆவணி முதல் 2009 கார்த்திகை வரை யான காலப்பகுதியில் அளவெட்டியில் வாழ்ந்த பண்டிதர் நாகலிங்கத்தின் (வடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவர்களது தந்தையார்) இல்லத்துக்கு வாரவிடுமுறை நாள்களில் சென்று உரையாடுவது வழமை. வினாக்களை எழுதிக்கொடுத்தால் அடுத்தவாரம் செல்லும்போது விடை எழுதிவைத்திருப்பார். பண்டிதருடன் விரிவான ஒரு நேர்காணல் செய்ய விரும்பியிருந்தேன். எந்த ஒரு வினாவை எழுதிக்கொடுத்தாலும் விளக்கமாக விடை எழுதித்தருவார். ஏறத்தாழ 100 வினாக்கள். அனைத்துக்கும் விடை எழுதித்தந்தார்.

**துவாரகன்(வினா):** மகாபாரதமும் திருக்குறளும் ஆறுமுகநாவலரது கைக்குக் கிடைத்தபடியால் அவற்றிலே பிரதிபேதங்கள் என்று வரவில்லை. அவர் ஏடுகளில் இருந்த பாடபேதங்களைப் பார்த்து பொருத்தமானதை மட்டும் எடுத்து நூலாக்கினார். ஆனால் இராமாயணம் வைஷ்ணவர்களுடைய கைக்குக் கிடைத்தது. அதிலே அவர்கள் பிரதி பேதங்களையும் போட்டிருக்கிறார்கள். அதனால் இன்று இராமாயணம் பல்வேறு விதமாக வழங்கப்படுகிறது.

தாங்கள் நாவலரைப் பற்றி மாணவர்களுக்கு எழுதிக் கொடுத்த கட்டுரைகள் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

நாவலர் தமிழுக்கு ஆற்றிய பணியை விரிப்பிற் பெருகும் என்று கூறியிருக்கிறீர்கள். இன்னும் பொ.கைலாசபதி (திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை முன்னாள் உப அதிபர்) இராமகிருஷ்ணரோ விவேகானந்தரோ விஷேசம் என்றால் விவேகானந்தர் தான் விஷேசம் என்று கூறி விவேகானந்தரை விட நாவலர் விஷேசம் என்று எவரோ கேட்டபோது சொல்லியிருக்கிறார். இக் கூற்றை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் ஈழத்திலேதான் நிலை பெற்றதாகவும் தமிழ் நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்ததாகவும் கூறுவர். பேராசிரியர் சிவலிங்கராசா இது பற்றித் தனது ஆய்விலே சிறப்பாகக் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்துடன் பரிச்சயமுள்ளவர்கள் யாழ்ப்பாணத்தை இன்னும் நாவலர் பிறந்த மண் என்று உயர்வோடு போற்றுவர்.

தங்களது மாணவனான க.உமாமகேசுவரம்பிள்ளையவர்களிடம் கொழும்பிலே தமிழ் படிக்கச் செல்லுகின்றபோது அவர் கூறுகின்ற விடயங்களை எழுதிவைப்பது வழக்கம். ஒரு நாள் இந்தியாவிலே தருமபுர ஆதீனத்திலே திருமுறைகளை அடங்கன் முறையாகப் பதிப்பதற்குத் தன்னை அழைத்தது பற்றியும் அங்கு நடந்த ஓர் உரையாடலைப் பற்றியும் உமாமகேசுவரன் கூறினார்.

**உமாமகேசுவரன்:**

தர்மபுரீஸ்வரர் ஆலயத்திலே ஒரு சந்திப்பு. ஒரு மாலை நேரம் வேலையெல்லாம் முடிந்த பின்னர் இச்சந்திப்பு நிகழ்ந்தது. நுளம்பு ஒன்று என் தோளில் வந்தமர்ந்தது. அதனை அடித்தபோது என்ன என்று கேட்டனர். நுளம்பு என்றேன். அப்போது ஒருவர் கேட்டார். அவரது பெயர் ஆறுமுகம். "யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து நுளம்பு என்று சொல்கிறீர்கள். நுளம்பு என்ன தமிழ்ச் சொல்லா" என்று கேட்டு "கொசு என்பது தான் சரி" என்றார் கொதுகு என்ற நிகண்டுச் சொல் ஒன்றை எடுத்துக்காட்டினார். எனக்கு உசாத்துணைக்கு என்று ஒரு அலுமாரியிலே தேவையான புத்தகங்களை அடுக்கிவைத்திருந்தனர். அப்போது நான் உடனே சொன்னேன். "போயப் பட்டினத்துப் பிள்ளையார் அருளிய கோயில் நான்மணிமாலையை எடுத்துவாருங்கள்" என்று. அதிலே நான்காவது பாட்டிலே நூலைப் பார்க்க, கடைசி வரி "கானில்வால் நுளம்பும் கருடனா தலினே" என்று வருவதைக் காட்டினேன்.



தமிழறிஞர் உமாமகேசுவரன்

**இந்தச் சம்பவத்துக்குப் பிறகு என்னிலே அவர்களுக்கு பெருமதிப்பு உண்டானது. என்னை இந்தியாவிலே நல்லமுறையில் கவனித்தார்கள். ஒரு குறையும் வைக்கவில்லை. இதைப் போய் ஆறுமுகம் ஆதீன சுவாமிக்குச் சொல்லியிருக்கிறார். சுவாமி உடனே சொன்னாராம் அவன் நாவலருடைய மண்ணிலே இருந்து வந்தவன் என்று. இதன் பிறகு ஒவ்வொருநாளும் பதிப்பு வேலை முடிந்து ஆறுமுகம் ஆதீனத்திடம் விடை பெறச் செல்லும்போது இன்று புதிதாக உமாமகேசுவரன் என்ன சொன்னார் என்று கேட்பார்.**

**பண்டிதர் நாகலிங்கம் (விடை):**

ஆறுமுகநாவலரது கையில் அகப்பட்டபடியால் திருக்குறள் முதலான பல நூல்கள் பாடபேதம் இல்லாமற் பதிப்பிக்கப்பட்டன. தமது நுண்மாண் நுழைபுலத்தால் ஏடுகளில் வேறுவகையாக அமைந்து கிடந்த சொற்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றில் மிகமிகப் பொருத்தமானதை எடுத்துக்கொண்டு மற்றையவற்றைத் தள்ளிவிடுவது நாவலர் வழக்கமாக இருந்ததால் நாவலர் பதிப்புகளில் பிரதிபேதம் காட்டப்படுவதில்லை. இது நாவலர் பதிப்புகளில் உள்ள விசேடமாகும்.

இராமாயணம் முதலிய நூல்கள் ஐயங்காரர்களிடம் அகப்பட்டு ஒரு சொற்கே பல பேதங்கள் காட்டப்பட்டுள்ளன. இதனால் படிப்போர்க்கும் குழப்பம் ஏற்பட ஏதுவாயுள்ளது. கட்டுரை பெரிதாக எழுதப்படாதபோதும் முக்கியமான அம்சங்கள் அதிலுண்டு.

**பன்னிரு திருமுறைப் பதிப்புப் பணியில் வித்துவான் உமாமகேசுவரன்:**

தருமை ஆதீன பன்னிரு திருமுறைப் பதிப்புப் பணிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து புலமையாளர்களான பண்டிதர் மு.கந்தையா, பண்டிதர் க. உமாமகேசுவரன் இருவரையும் தருமபுர ஆதீனம் அழைத்தது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் காந்தளகம் சச்சிதானந்தன். பண்டிதர் மு. கந்தையா உடல் நலக் குறைவு காரணமாக சிலமாதங்களில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

உமாமகேசுவரன் 1997-1998 காலப்பகுதியில் ஓராண்டு காலம் மயிலாடுதுறையிலும் சென்னையிலும் தங்கியிருந்து பதிப்பு ஆலோசகராகப் பணியாற்றினார். உமாமகேசுவரன் பாடபேதங்கள் பார்த்து சரியானவற்றைச் சேர்த்தும் தேவையானவிடத்து அடிக்குறிப்புகள் இட்டும் பன்னிரு திருமுறைத் தொகுதிகளும் செம்பதிப்பாக வெளிவருவதற்குக் காரணமானவர். இவரது பெயர் துணைப்பாசிரியர் வரிசையில் வித்துவான் க. உமாமகேசுவரன், யாழ்ப்பாணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரிசையில் பண்டிதர், கலாநிதி மு. கந்தையா பி. ஏ., ஏழாலை, யாழ்ப்பாணம் என்றும் உள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்குவெட்டி

பேராசிரியர்
கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்





அம்மா வழியில ஒரு முறையில எனக்கு அவா ஒண்டுவிட்ட குஞ்சியம்மா. ஆனா அவாவின்ர பேரப்பிள்ளைகள் அம்மம்மாவெண்டு கூப்பிடுறதால எனக்கும் அவா ஒரு 'அம்மம்மா'தான். அப்பிடி ஒரு மனிசியப் பாக்கிறது எண்டுறது வலு 'கயிட்டம்'. அம்மம்மாவின்ர உலகம் ரொம்பச் சின்னது. புருசன், பிள்ளைகள், கறிபுளி, ஊரில் நல்லது கெட்டதுகள், கோயில் குளம் இவ்வளவோட சரி. ஆனாலும் ஊரில் தரவுகளெல்லாம் அம்மாம்மாவின் நுனிநாக்கில் எப்போதும் இருக்கும். ஓடினதுகள், ஓடப்போறதுகள், தொடுப்புகள், பட்டதுகள், படப்போறதுகள் இப்பிடி விதம் விதமான தகவல்களையெல்லாம் புதுசு புதுசா அவா தெரிஞ்சிருப்பா. ஒரு வகையில அவாவ 'இன்ரர்நெற்றின்ர' ஒரு 'ஏர்லிவேர்சன்' எண்டும் சொல்லலாம்.

அம்மம்மாவின்ர 'கைப்பக்குவம்' ரொம்பவும் விசேசம். மீன்குழம்பு, முருங்கை இலை வறை, சுறாவறை, திருக்கைவறை, கைச்சொதி, கூழ், கருவாடு இறக்கிய பூசணிக்காய் கறி இப்படி பல அயிட்டங்களுக்கு அவாதான் 'ஒதோறிற்றி'. அவவின்ர கையில் 'பிஸ்டல்' போல எப்பவும் காம்பு நீண்ட ஒரு பாக்குவெட்டி இருக்கும். வெத்தில நல்லாப் போடுவா. அவாவின் வாய் எப்போதும் 'கொவ்வைச் செவ்வாய்' தான்...... குமிண் சிரிப்புக்கும் ஒண்டும் குறையிருக்காது.

காம்புநீண்ட அந்தப் பாக்குவெட்டிக்குப் பல சோலிகள். பாக்குப்பிளக்க, சுண்ணாம்பு டப்பாவுக்குள்ள இருக்கிற சுண்ணாம்பைத் தோண்டி எடுக்க, பொயிலைக்காம்பை அளவாக நறுக்க, பலாக்கொட்டை பிளக்க, சொதிக்குள் போடுற நண்டுக்காலை இலேசாக உடைத்து நறுக்க, மாசிக்கருவாட்டைப் பிளக்க, சமயத்தில பாக்குவெட்டியை நீட்டாக விரிச்சுப்பிடிச்சு முதுகு சொறிய... என அதன் பேருக்கு அப்பாற்பட்ட சோலிகள் பலதும் அதுக்கு இருந்தது. அது நறுக்காத எதுவுமே இல்லையெண்டு வையுங்கோவன். கனக்க கதையேன் அவாவின்ர சின்னி விரலைக்கூட அது ஒருதரம் நறுக்கியிருக்கு எண்டால் பாருங்கோவன். பேர்தான் பாக்குவெட்டி. நம்மட வீட்டு 'டைனிங்டேபிள்' போல ,அதில என்னவெல்லாம் கிடக்கும் எண்டு கற்பனை பண்ணுங்கோ. சுடலையடி ஆலமரம் இளங்கொடிகளால் நிறைஞ்சிருப்பது போலதான் அந்த மேசையெண்டு சொல்லலாம். அவாவின்ர பாக்குவெட்டி எப்பவும் அவாவைப்போல வலு கூர்மைதான்.

அம்மம்மாவின்ர சமையல் பக்குவம் நீர்வத்தல் தேங்காயை வலையிழுக்காமல் மிருதுவாகத் துருவி நெருக்கிப் பிழிந்து முப்பாலும் எடுப்பதோடுதான் எப்போதும் தொடங்கும். முப்பால்தான் கறிவகையைத் தீர்மானிக்கும். ஆண்பால், பெண்பால், பலர்பால் என தமிழ் இலக்கணத்திலும் முப்பால் வகைகள் உண்டு. இது அதுவல்ல. தலைப்பால், ரெண்டாம்பால், கப்பிப்பால் என அவையிருக்கும். அரிக்கன் சட்டியில பூவைப் பரத்தி, இரண்டு கையளுக்குள்ளும் பூவை அள்ளி எடுத்து நெருக்கிப் பிழியிறதில இப்பத்தையான் 'மிக்சி'கள் எல்லாம் அம்மம்மா விட்ட தோற்றுப்போகும். அவ்வளவு ஒரு நெருக்குவாரம்.

பாக்குவெட்டியால மரவள்ளிக்கிழங்கை பிளந்து, பக்குவமாகத் தோலெடுத்து அளவான துண்டுகளாக அவற்றை நறுக்கி, பச்சைமிளகாய், வெங்காயம், எப்பன் தசைப்பிடிப்பான விளை மீன் கருவாட்டுத் தலைத்துண்டு போட்டு அளவான தண்ணி விட்டு, அவிஞ்சு வரேக்க மிளகாய்த்தூள், கறிவேப்பிலை, பழப்புளி இறக்கி எப்பன் தலைப்பாலும் விட்டு அகப்பைக்காம்பால கிளறி, மசித்தும் மசியாமலும் கிழக்குத்துண்டுகள் கடிபடும் பதத்துக்கு அவாஎடுப்பா. பின்னேரப் புட்ட 'பேஸ்ட் பண்ணி' உள்ள இறக்குறதில இவருக்கு நிகர் வேறே ஆரும் உண்டோ? நாங்கள் வாய்பாத்தபடி இருந்தா , சிரட்டைக்குள்ள மரவள்ளிக் கிழங்குக் கறியை அளவா நிறைச்சுத்தருவா. விரலால தோண்டி நக்கி நக்கிச் சாப்பிடுறதில இருக்கிற சுகம்.........!

முருங்கையிலைவறை, சுறாவறை, கடல்தாமரைக்கறி, கெளுத்துமுட்டைக்கறி என அம்மம்மாவின் கறிவகைகளுக்கு 'மெய்யடியார்கள்' அதிகம்தான். வெளிநாட்டுக்காரர்களும் ஊருக்கு வரும்போது ஒரு 'சென்ரையும்' ஒரு 'மின்ரையும்' கொடுத்து அம்மம்மாவின்ர சாப்பாட்டை ஒரு பிடிபிடிக்கத் தவறுவதில்லை. அம்மம்மா உபசரிப்புக்குப் பதிலா எதையும் எதிர்பார்ப்பதில்லை. அது அவாவின்ர சுபாவம். யாழ்ப்பாண உணவுப் பண்பாட்டில 'சொதி'யாருக்குப் பிரதான இடம் உண்டு பாருங்கோ. இரண்டாம் தரச்சோத்துக்கு (Innings) 'அம்பையர்' இவர்தான். இவரின்ர உரிசையைப் பொறுத்துத்தான் 'மச்' (Match) நீளும். புளிச்சொதி, மாங்காய்ச்சொதி, கைச்சொதி இப்படிப் பல இரகங்கள். 'சொதி' உரிசையாமட்டும் இருந்தால் போதாது. 'வடிவிலும்' அது சரியாக இருக்கவேணும் எண்டுறது அம்மம்மாவின் பக்குவம். கைக்களவான பிள்ளைமுரல்களை இரண்டு துண்டுகளாக வெட்டி, வெங்காயம், பச்சைமிளகாய், புளிமாங்காய் எப்பன் வெந்தயம், மஞ்சள்தூள், உப்பு போட்டு, கணக்கான நெருப்பில் அவியவிட்டு அவிஞ்சுவரேக்க பொடிப் பண்ணிய தக்காளியைத் தூவிய கையோட தலைப்பால் உள்ளிட்ட பால்களைக் கலந்து 'ஏப்பையும் கை'யுமாக இருந்து ஆத்தி எடுப்பது அம்மம்மாவின் பக்குவம். தக்காளித் துண்டுகள் அவிஞ்சு கரையாமல் சொதிக்குள் முழுசிக்கொண்டு இருக்கும். அதன் சுவையோ சொல்லில் அடங்காது. இரண்டு கறிவேப்பிலை நாட்டுகளைக் கையால கிழிச்சு சொதிக்குள்ள போட்டு ஆத்தி மூடிவிட்டு ஆறிய உடன எலுமிச்சம்பழச்சாறு பிழிஞ்சு விடுவா. கறி சொதிகளின் உப்புப் புளி அளவை, அவை அவிஞ்சுவரும் வேளை வரும் வாசனை கொண்டே அறியும் பக்குவம் அம்மம்மாவப் போல அக்காலத்து அம்மம்மாக்கள் பலருக்கு இருந்தது என்னவோ உண்மைதான்.

'கைச்சொதி' பற்றிக் கேள்விப்பட்டியளோ? சின்னவெங்காயத்தை வட்டம் வட்டமாக வெட்டி, கறிவேப்பிலை, பெருஞ்சீரகம், செத்தல்மிளகாய் எப்பன் வெந்தயம் சேர்த்து பொன்னிறத்துக்கு வதக்கி, வதங்கிவர அம்மம்மா பழப்புளி தூக்கலான ஒரு பால் கலைவையை அதுக்குள்ள ஊத்தி ஆத்தி எடுப்பா. இந்தச் சொதியில புளிப்புச்சுவை எப்பன் தூக்கலாக இருக்கும்படி பார்த்துக்கொள்வா. இவரத் துணைக்குச் சேர்த்தா ஒரு நீத்துப்பெட்ட வெள்ளமாப்புட்டு ஒரு வில்லங்கமும் இல்லாம இறங்கும். அவ்வளவு உரிசை. என்னதான் உதவி ஒத்தாசைகளுக்கு பலர் இருந்தாலும் 'கூட்டிக்கொடுப்பது' என்னவோ வயசானவர்களாகத்தான் இருப்பார்கள். நீங்கள் நினைப்பது எனக்கும் விளங்குது. நான் கறிவகைகளைச் சொன்னன். சம்மாணம் போட்டு இருந்து எல்லாவற்றையும் கைமதியத்தில அளவாப்போட்டு கையால ஒரு கலக்கு கலக்கி, 'எரிச்சு இறக்கு புள்ள' என்றொரு அருள்வாக்கு மட்டும் எப்போதும் அம்மம்மாவிடமிருந்து வருதல் உண்டு. உலை வைச்சு அரிசிபோட்டு கஞ்சி வடித்தவுடன் 'அடுப்பு' (Heat Control) கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். அதன் பின்புதான் அடுப்பின் காங்கைக்கு ஏற்ப கறிகளின் 'ஆரோகணம்' ஒன்றன்பின் ஒன்றாக அடுப்பின் மீது நிகழ்வதுண்டு.

அம்மம்மாவின்ர பொரிச்சிடிச்ச சம்பல், இடிஞ்சு குழைஞ்சு வரேக்க ஒருவித வாசம் வீசும். தேங்காய் எண்ணெய் பூசிய தாச்சியில மிளகாய்க் கொட்டையை வேறாகவும் மிளகாய்த் தோலை வேறாகவும் அளவான ஒரு பதத்துக்கு அவ வறுத்தெடுப்பா. அம்மம்மாவின்ர ஒடியல்மாப் புட்டை நினைச்சால் இண்டைக்கும் நாவில எச்சிலூறும். 'காறல்' நீக்கிய ஒடியல்மாவைக் குழைத்து உதிரியாகப் பூப்போல குத்தியெடுத்து நீத்துப்பெட்டி [illegible] பச்சை மிளகாய், சின்னவெங்காயம், உப்பு சகிதம் அவிஞ்ச விளைமீன் துண்டுகளை முள்ளை நீக்கி உதிர்த்துப் பரத்தி ஏப்பைக்காம்பால பலவேளைகளில் பாக்குவெட்டிக் காம்பால கிளறித்தருவா.

எல்லோருக்கும் போல அவாவுக்கும் இடப்பெயர்வுச்சூழல் ஒன்று வந்தது. சொற்ப உடுப்புகளுடன் மருந்துச்சரை, பாக்குவெட்டியுடன் அவாவின்ர இடப்பெயர்வு நிகழ்ந்தது. இடம்பெயர்ந்து இருந்த இடத்தில அவவின் 'மச்ச ஆசை'யைப் பூர்த்தி செய்தது என்னவோ மாசித்தூள்தான். கடலில மிதக்கிற கட்டுமரம், தோணி தவிர்ந்த எல்லாவற்றையும் காய்ச்சித்திண்ட மனிசிக்கு மாசித்தூள்தான் கடைசிக்காலத் துணை. சும்மா இருக்கும் வேளைகளில் தன்ர பாக்குவெட்டியால மாசிக்கருவாடுகளை ஒருவித சிராய்ப்புச் சிராய்ச்சு தூளாக்கும் முயற்சியை அவா எப்போதும் செய்வா. வாய்பார்த்துக் கொண்டு நாங்கள் நிண்டால் எப்பன் பார்வையான ஒரு துண்டை சாப்பிடத் தருவா. எங்களைச் சிராய்க்கவிட்டா ஒரு துண்டும் மிஞ்சாது என்பது அவாவுக்கு நல்லாத் தெரியும். இப்படித்தான் ஒரு நாள் அவாவின்ர நல்லகாலமோ மிக்சி விக்கிறவன்ர கெட்டகாலமோ ஒருத்தன் தலையில 'மிக்சி'யுடன் வந்தான். அம்மம்மாவுக்கோ வலு புளுகம்.

'என்னடா தம்பி இது?' எண்டா.

'அரைக்கிற மிசின் இது' - அவன்

'கருவாட அரைக்குமா?' - இது அம்மம்மா

'கருவாடா! கல்லையே அரைக்கும் அம்மா!' - இது அவன்

மாசிக்கருவாட்டை அறியாதவன் போல........?

'தம்பி இத அரையடா பார்ப்பம்? 'என்றா அம்மம்மா!

அப்போதும் பாக்குவெட்டியால மாசியைப் பெருந்துண்டங்களாக நறுக்கிக் கொடுத்தா.

அவனுக்கு 'ஏழரைச்சனி'............

மிக்சிக்குள் போட்டதுதான் தாமதம் நாலு சுத்துச் சுத்தி 'டொங்' என்றொரு சத்தம்.. திறந்து பார்த்தால் 'பிளேட்' அது இருந்த இடத்தில் இல்லை.

ஆனாலும் அம்மம்மாவுக்குத் தேவையான பதத்தில் 'மாசித்தூள்'....... நொருங்கி அவாவைப் பார்த்துச் சிரித்தது. வெற்றிக்களிப்பில் பேப்பரை விரித்து மாசித்தூளை பக்குவமா அவ வாங்கி எடுத்தா. அவனின் நிலையோ பரிதாபம். நுரைதள்ளிய பிளேன்ரீயும் உப்பு விசுக்கோத்தும் கொடுத்து அவனை உபசரிச்சா' கருவாடு இப்பிடியும் இருக்குமா?' எண்டு அப்போதுதான் அவன் கேட்டான்? சொந்த இடம் எது அம்மா எண்டும் கேட்டான். திருப்பவும் அந்த ஊர்ப்பக்கம் வரக்கூடாது எண்ட நினைப்பில்போல.

ஊரை உபசரிச்ச அம்மம்மா ஒருநாள் திடீரெனத் தன் மூச்சை விட்டா. ஊரே கலங்கி அழுதது. அம்மம்மா ஆகுபெயருக்கான அற்புதமான உவமையானார்.

நெஞ்சாங்கட்டைத் தறியல்!

தட்டுப்பந்தல்!

பன்னாங்கு பின்னல்!

தென்னந்தோரணம்!

ஐயர் வருகை !

எனக் காரியங்கள் ஒவ்வொன்றாக விறுவிறுவெண்டு நடந்தேறின. தன்ர உடலை உடனே சுடவேணும் எண்டு அம்மம்மாவின் கட்டளை. குடலெடுத்து பஞ்சடைஞ்சுகிடக்க அவாவுக்கு எப்பவுமே விருப்பமில்லை.

எட்டாம்நாள் செலவு. 'கடலே கரைக்கு வந்தது போல' ஒரு படையல்...... அம்மம்மாவின் பக்குவத்த கொண்டுவர ஊரில் உள்ள பெண்டுகள் எல்லோரும் கூடி எவ்வளவோ முயன்று கொண்டிருந்தார்கள். 'கிழவியின்ர கறிசோறு எண்டால் எப்படி மணக்கும்? இஞ்ச ஒண்டையும் காணயில்ல ;எண்டாள் ஒருத்தி!. 'சிலவுச்சமையல் மணக்காதடி.பறையாம வேலையைப் பாரென்றாள்!' வேறொருத்தி. காப்பு, சங்கிலி, மூக்குக்கண்ணாடி, முடிமயிர், காதோலை சகிதம் அம்மம்மாவை தன்னளவில் ஒருத்தர் உருக்கொடுத்துக் கொண்டிருந்தார்.

'பாக்குவெட்டி'யைப் பலரும் தேடினர்.....

ஆறாத சோகத்துடன் பாக்குவெட்டியை அடிமடியில் மறைத்து வைத்து நான் தலைமறைவானேன். அம்மம்மாவின் பாக்குவெட்டியின் நீளமான காம்பைப்போல அவவின் நினைவுகளும் இன்னும் நீளமாகவே எனக்குள்........!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்

பண்டைய தமிழ் இலக்கியங்களின் பல்பரிமாணத் தன்மையினை விளக்கும் முகமாக 'சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்' என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொடர் சஞ்சீவியில் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ளது. பண்டைய தமிழர் மருத்துவம், பண்டைக்கால தமிழர்களின் வணிகமும் வணிக நடைமுறைகளும், தமிழர் பண்பாடு, பண்டைய தமிழரின் சமூக நோக்கு, பண்டைய இலக்கியங்களின் பொருளாதாரக் கருத்துகள், அறக் கருத்துகள், சங்ககாலப் பெண் கவிஞர்களின் பார்வையில் பண்டைய தமிழர் வாழ்வியல், சமூக வாழ்வியலில் பெண்களின் வகிபாகம் போன்ற விடயங்களை இந்தக் கட்டுரைத்தொடர் வாராவாரம் வாசகர்களுக்குத் தரவுள்ளது.

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
*சந்தைப்படுத்தல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



## சிலப்பதிகாரத்தில் வணிகம் பற்றிய கருத்துகள்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வணிகர்களினைப் பற்றிய தன்னிகரற்ற காப்பியங்கள். இவ் இரு காப்பியங்களும் சமண பௌத்த அறங்களினையும், வணிக குலத்தின் வாழ்வியல் முறைகள், வாழ்வியல் சித்தாந்தங்களையும் விபரிக்கின்றனவாக அமைந்துள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு வணிக நடவடிக்கைகளில் சங்ககாலத்திலேயே தமிழர்கள் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்குப் பல்வேறு இலக்கிய, வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இவ்வாறு வணிக நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் வியாபாரிகள், வாணிபர், வாணியர், வணிகர், நகரத்தார் மற்றும் செட்டியார் எனப் பொதுவாக அழைக்கப்பட்டனர். செட்டியார் என வணிகர்களினைப் பொதுவாக அழைக்கும் சொல்லானது சிரேணி என்ற வட சொல்லின் திரிபு என்று மொழியியல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் ஐநூற்றுவர், வியந்தார், நாநாதேசிகள் மற்றும் வளஞ்சியர் என்னும் சிறப்புப் பெயர்களினாலும் அழைக்கப்பட்டனர்.

சங்கம் முதல் சிலப்பதிகார காலம் வரை புகார் நகரம் தமிழர்களின் சமூக, பொருளாதார பண்பாட்டு மேம்படுத்தல்களுக்கான ஒரு தளமாக அமைந்திருந்தது. பண்டைய தமிழர்களின் பொருளாதார மேம்பாடு வணிகம் மற்றும் விவசாயம் மூலமான செயற்பாடுகளிலேயே விரிவடைந்திருந்தது. சிலப்பதிகார காலத்தில் புகார் நகரில் மருவூர்ப்பாக்கத்தில் பெரும் வணிகர் குடியி ருப்புகள் இருந்தன. அவர்கள் கடல்வழிப்பயணம் செய்து நாவாய்களிலும், மரக்கலங்களிலும் வியாபாரத்துக்காக எடுத்துக்கொண்டு வந்த பொருள்களையும் உள்நாட்டிலிருந்து வண்டில்களில் கொண்டு வந்த பொருள்களையும் பூம்புகார் வீதிகளில் மலை போல் குவித்துவைத்திருந்தனர். இதனை மனையறம் படுத்த காதை (2:57), கடல் ஆடுகதை(6: 152 155) போன்றவற்றில் காணப்படும் வரிகளிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

புகார் நகரில் வாழ்ந்த மக்களின் தேவைகளினைப் பூர்த்தி செய்யக்கூடிய உணவு (அப்பம், பிட்டுகள்) மற்றும் குடிவகைகள், வாசனைப் பொருள்கள் (சந்தனம், அகில்), உடுபொருள், அணிகலன்கள் பட்டு, பவளம், முத்து மணி போன்றவற்றுடன் மீன், உப்பு, பலவகையான ஊண்கள் (இறைச்சி வகைகள்), வெற்றிலை, எண்ணெய் போன்றனவும் புகார் நகரில் விற்பனை செய்யப்பட்டன. இதனை இந்திர விழா ஊர் எடுத்த காதை (5: 16 30) வரிகளிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

புகார் நகர்வாழ் மக்களில் ஒரு பகுதியினர் நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். அந்த வகுப்பினர்களினை சாலிகள் எனவும் அழைக்கப்பட்டனர். குறிப்பாக பண்டைத்தமிழ் மங்கையர்கள் தமது ஓய்வு நேரங்களினைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தி தமது குடும்பத்தினருடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள நெசவுத் தொழிலை ஒரு கருவூலமாகப் பயன்படுத்திக்கொண்டனர். சாலிகள் நெசவினை மேற்கொண்டபோதும், அதனைத் தரம்பிரித்து சந்தைக்கு ஏற்றவாறாக சந்தைப்படுத்தல் முறைமைகளினைப் பயன்படுத்தி ஆடை வர்த்தகத்தினை அறுவை வணிகர்கள் மேற்கொண்டனர். மதுரைக்கடை வீதிகளில் நெசவு செய்த பட்டு, பருத்தி ஆடைகள் விற்பனைக்கு ஏற்றவாறு தர அடிப்படையில் வகைப்படுத்தியும் துணிகளினை விற்பனைக்கு உகந்த அளவுகளில் குறிப்பிட்ட அளவு கொண்டவைகளாக அழகாகக் கடைத்தெருக்களில் அடுக்கி விற்பனை செய்தனர். மேலும் நெசவு செய்யப்பட்ட ஆடைகளில் இழை சென்ற இடம் கூடத் தெரியாதவாறு மிக நெருக்கமாகவும் நுண்மையான திறன் கொண்டும் நெய்யப்பட்டிருந்து. இதற்கு ஊர்காண் காதையில் உள்ள பின்வரும் வரிகள் சான்றாகின்றன.

**நூலினும், மயிலினும், நுழை நூல் பட்டினும்**
**பாவகை தெரியாப் பலநூறு அடுக்கத்து**

**(சிலம்பு 14 : 204205)**

பின்வரும் வரிகளின் வழியே புகார் நகரில் மதிநுட்பம் கொண்ட கைதேர்ந்த நெசவாளர்கள் வாழ்ந்தார்கள் என்பது புலப்படுகின்றது.

**பகர்வனர் திரிதிரு நகர வீதியும்**
**பட்டியும், மயிரினும், பருத்தி நூலினும்,**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்**

**(சிலம்பு 5 : 1618)**

பண்டைய தமிழர்கள் நவீன உலகில் நடைமுறையிலிருக்கின்ற விநியோக முறைகளை அன்றே பயன்படுத்தியுள்ளனர். நெசவு நெய்பவர்கள் சாலியினர்களாகவும், அதனைத் தரம்பிரித்து பொதியிட்டு விற்பனை செய்பவர்கள் அறுவை வாணிபர்களாகவும் இருந்தனர். சிலம்பில் எவ்வாறு புகார் நகரில் வாழ்ந்த வணிகர்களினைப் பற்றியும், சந்தை, சந்தைக் கட்டமைப்பினையும், சந்தைத் தெருக்களினையும் இளங்கோ அடிகள் குறிப்பிட்டிருந்தாரோ அவ்வாறே மதுரை மாநகரின் கடைத் தெருக்களினையும் அங்கு விற்பனை செய்யும் பொருட்களினையும் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கிளீன்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

**இந்த லட்சணத்தில் நாட்டைச் சுத்தப்படுத்துகிறேன் என்று புறப்பட்டு வேண்டுமானால், வீதிகளைச் சுத்தப்படுத்தலாம். சுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்தலாம். அதற்கும் வரையறைகள் உண்டு. ஏனென்றால் சுற்றுச் சூழலும் அரசியல்தான்.**

ஒப்பீட்டளவில் ஓரளவுக்காவது சுத்தப்படுத்தக்கூடிய துறை அதுதான். அதுதவிர ஏனைய எந்தத் துறையிலும் நாட்டைச் சுத்தப்படுத்தமுடியுமா? முடியாது. ஏனென்றால் ஊழல், முறைகேடு, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றன ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டன. எங்கிருந்து அவை பண்பாடாக மாறின? எல்லாப் பிரச்சினைகளையும் இனப் பிரச்சினைமூலம் திசை திருப்பலாம் என்ற அரசியல் சூழல்தான் காரணம். எல்லாத் தவறுகளையும் இனமுரண்பாட்டைத் தூண்டுவதன்மூலம் கடந்துவிடலாம் என்ற ஒரு அரசியல் சூழல்தான் காரணம்.

தமிழ்ப் பகுதிகளில் அரச திணைக்களங்களில் காணப்படும் விமர்சனத்துக்குரிய பெரும்பாலான அம்சங்கள் தொடர்பாக அதிகாரிகளைக் கேட்டால், "அரசாங்கம் விடுவதில்லை அல்லது மேலதிகாரிகள் இனரீதியாக விவகாரத்தை அணுகுவார்கள்" என்றெல்லாம் சாட்டுச் சொல்லுவார்கள். "நாங்கள் எதையாவது செய்தால் அதனை இனரீதியாக வியாக்கியானப்படுத்தி எங்களைப் பதவி இறக்கி விடுவார்கள். அல்லது நமது பதவி உயர்வுகளை நிறுத்தி விடுவார்கள்" என்று கூறுவார்கள்.

இப்படியே இரண்டு இனங்கள் மத்தியிலும் காணப்படுகின்ற எல்லா முறைகேடுகளுக்கு இன முரண்பாட்டை ஒரு சாட்டாகச் சொல்லும் பண்பாடு வளர்ந்து விட்டது. ஏன் அதிகம் போவான்? ராஜபக்ச குடும்பத்தில் பஸில் ஒரு புரோக்கராக, ஒரு 'டீல் மேக்கராக' எப்படி எழுச்சி பெற்றார்? யுத்த வெற்றிதான் காரணம். யுத்தத்தில் வென்றவர்கள் நாட்டைத் தனிப்பட்ட சொத்தாக மாற்றினார்கள். நாட்டின் கருவூலத்தைத் திருடினார்கள். வெற்றி மயக்கத்தில் குருடாக இருந்த சிங்கள மக்களுக்கு அது முதலில் தெரியவில்லை. அது தெரிந்த பொழுது, நாடு மீள முடியாதபடி பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி விட்டது.

இப்பொழுது அநுர வந்திருக்கிறார். இன முரண்பாடுகள் இல்லை என்று சொல்லுகிறார். அது தவறு. இன முரண்பாடுகள் எப்படி இல்லாமல் போயின? தமிழ்ப் பகுதிகளில் அவருடைய வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியை வைத்து அவ்வாறு கூறமுடியாது. இனமுரண்பாடு எங்கிருந்து தோன்றியது ?தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக, தேசமாக ஏற்றுக்கொண்டு பல்லினத்தன்மை மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பத் தயாரில்லை என்பதுதான் இன முரண்பாட்டின் வேர். எனவே இனமுரண்பாட்டைத் தீர்ப்பது என்பது நாட்டின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களைச் செய்வதுதான். ஆனால் அதைச் செய்வதற்கு அநுர தயார் இல்லை.

அநுரவின் இடத்தில் யார் இருந்தாலும் அதைச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் இனப்பிரச்சினைதான் நாட்டைக் கடனாளியாக்கியது என்ற விடயத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு காரணம், ஊழலும்முறைகேடும் என்றுதான் அவர்களிற் பலர் கூறி வருகிறார்கள். சிங்களப் புத்திஜீவிகளில் பெரும் பகுதியினரும் அப்படித்தான் கூறி வருகிறார்கள். பொருளாதார நெருக்கடியின் மூலகாரணத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் ஒரு வகையில் இனவாதம்தான்.

ஆனால் இப்பொழுது இனப்பிரச்சினையில் கை வைத்தால், அதாவது ஒரு புதிய யாப்பை உருவாக்கும் விடயத்தில் கை வைத்தால், அது இளம் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது. எனவே பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்குத் தணித்த பின், ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இனப்பிரச்சினையில் கைவைக்கலாம் என்றும் ஒரு விளக்கம் கூறப்படுகிறது. இது வண்டிலுக்குப் பின் மாட்டைக் கட்டும் வேலை. நோய்க்கு உரிய உள்மருந்தை வழங்காமல், வலி நிவாரணிகளை மட்டும் வழங்கும் ஓர் அரசியல்.

எனவே இந்த இடத்தில் மாற்றத்தைச் செய்ய அநுரவால் முடியாது. அவருக்குக் கிடைத்த வெற்றியின் கைதி அவர். அந்த வெற்றியை மீறி அவர் சிந்திக்கமுடியாது. அதனால்தான் கவர்ச்சியான சுலோகங்களை முன்வைக்கின்றார். நாட்டைச் சுத்தப்படுத்தப் போவதாகக் கூறுகிறார். ஆனால் நாட்டின் உண்மையான கறை அப்படியே இருக்கத்தக்கதாக அதன் விளைவாக வந்த கறைகளை அகற்றுவது என்பது வலி நிவாரணி அரசியல்தான். எனவே நாட்டைச் சுத்தப்படுத்துவது என்றால் இனப்பிரச்சினை என்ற கறையை அகற்ற வேண்டும். அங்கிருந்துதான் சிறீலங்காவைக் கிளீன் பண்ணத் தொடங்க வேண்டும்.



**எஸ்.திஸானன்**
தரம் - 5
யா/ சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



**ஆ.அஸ்வின்**
தரம் - 5D
யா/ கொக்குவில் இ.ஆ.பாடசாலை

**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



**ச.குஹப்பிரணவி**
தரம் - 4C
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை



**ம.மதுனிகா.**
தரம் - 1A
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை



**மு. பூர்ணிகா**
தரம் - 2A
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி




**என்.அனிஸ்ராம்**
தரம் -7B
யாழ்.மத்திய கல்லூரி



**ரி.வாகீஸ்**
தரம் - 11
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்



**ம.சிவரூபன்**
தரம் - 3D
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



**தீ.நயனிகா**
தரம் - 3C
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org